விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 23 வியாழக்கிழமை (07.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 078

## ஜெனிவா பிரேரணை தோல்வியடையலாம்!

### கூட்டமைப்பு ஆராய்வு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

நேற்றைய கூட்டத்தில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்ட விடயம் ஜெனிவா விவகாரம்தான்.

இலங்கைக்கு காலஅவகாசம் வழங்கக்கூடாது என புலம்பெயர் தமிழர்கள் வலியுறுத்துகிறார்கள், தமிழ் அரசியல் கட்சிகளும் 23☛

## வெப்பமான வானிலை வடக்கில் இன்று நிலவும்

### எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் 11 மாவட்டங்களில், இன்று கடும் வெப்பமான வானிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் மக்கள் அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிழக்கு மாகாணத்தில் 24☛

### ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்

## பொதுத் தேர்தலுக்கே வாய்ப்புகள் உள்ளது!

### ஜனாதிபதி மீளவும் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் வாய்ப்புகள் உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை ஊடகங்களின் ஆசிரியர்களைச் சந்தித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார். 24☛

### எமது பிரச்சினையை நாமே தீர்ப்போம்

## ஆளுநர் சுரேன் ராகவனை ஜெனிவா அனுப்பும் மைத்திரி

(கொழும்பு)

வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் உள்ளிட்ட மூன்று பேர் இலங்கை அரச தரப்பில் ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ளதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். 24☛

### ஜெனிவாவுக்கு பிரதிநிதிகள் அனுப்புவது தொடர்பில்

# ஜனாதிபதி - பிரதமர் இடையே மோதல்!

(கொழும்பு) ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடருக்கு தமது பிரதிநிதிகளை அனுப்பி ஐ.நா தலையீடுகளை எதிர்ப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள முடிவினால் அரசாங்கத்துக்குள் மோதல் வெடித்துள்ளது. (23-ம் பக்கம்...)

### மன்னார் புதைகுழி தொடர்பான

## பரிசோதனை அறிக்கை நீதிமன்றுக்கு கிடைத்தது

(மன்னார்)

மன்னார் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான அதிகார 23☛

## காணாமலாக்கப்பட்டோருக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும்

### என்பதில் அமெரிக்கா உறுதி - யாழில் அலைனா

(யாழ்ப்பாணம்)

ஜெனிவா பிரேரணை குறித்து நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பீ டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று புதன்கிழமை விஜயம் கொண்டு நிலைமைகளை 23☛

## ஜெனிவா பிரேரணையில் திருத்தங்கள் வேண்டும்

### உறுப்பு நாடுகள் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

உறுப்பு நாடுகளும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இந்த கோரிக்கையை 23☛

## இலங்கை - சீன உறவு வலுப்படும்

### சீனத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவை, சிறுவர்கள் மூலம் வளர்ப்பது சிறந்தது என இலங்கைக்கான சீனாவின் தூதுவர் செங் கியூவான் தெரிவித்தார்.

சீன தூதுவராலயத்தின் உதவியுடன் மன்னார் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு. 24☛

## வடக்கில் பொதுமக்கள் காணிகளை படையினர் விடுவிக்க வேண்டும்

### பலாலியில் அமெரிக்க தூதுவர் அலைனா

(யாழ்ப்பாணம்)

யாழ். பலாலியில் புதிதாக விடுவிக்கப்பட்ட நிலங்களை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பீ டெப்லிட்ஸ் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

வடக்கிற்கு சென்றுள்ள அமெரிக்க தூதுவர் அலைனா பீ டெப்லிட்ஸ் இந்த விஜயத்தின் ஓர் அங்கமாக 24☛



## எல்லை மீறும் இராஜதந்திரிகள்

### ஜனாதிபதி சீற்றம்

(கொழும்பு)

சில வெளிநாட்டுத் தூதுவர்கள் தமது எல்லையை மீறுகிறார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் ஊடகங்களின் ஆசிரியர்களுடன் நடத்திய சந்திப்பின் போதே அவர் இதனை 24☛

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்க

### ஜே.வி.பிக்கு மகிந்த நிபந்தனை



24☛

## 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட விபரம் கோத்தபாயவுக்கு தெரிவிக்கப்பட்டது

### அடிப்படை உரிமை மனுவில் முன்னாள் கடற்படை தளபதி வெளிப்படுத்தல்

(கொழும்பு)

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 2008 - 2009 காலப் பகுதியில் அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தன்னால் தகவல் வழங்கப்பட்டதாக அந்த வழக்கில் சந்தேகநபராக இணைக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட வெளிப்படுத்தியுள்ளார்.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் தன்னைக் கைது செய் 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மட்டக்களப்பில் வெட்டப்பட்ட கிணற்றில் மனித எலும்புக்கூடுகள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானில் மனித எலும்பு எச்சங்கள் என சந்தேகிக்கப்படும் தடயங்கள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். கடற்கரை வீதியோரத்தில் உள்ள தனியார் காணி ஒன்றில் கிணறு ஒன்றை அமைப்பதற்காக, குழி வெட்டும்போதே, மனித எச்சங்கள் என சந்தேகிக்கப்படும் தடயங்கள் காணப்பட்டுள்ளன. இதையடுத்து



கிராம சேவகர் ஊடாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

குறித்த எச்சங்கள், சுமார் 25 வருடங்களுக்கு முற்பட்டவையாக இருக்கலாமென, பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸாரும் ஏறாவூர் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டு சத்துருக்கொண்டானில் கடத்தப்பட்டு பலர் படுகொலை செய்யப்பட்டனர். பலர் காணாமல் ஆக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஓராண்டு நீங்கா நினைவலைகள்

### அமரர் பொன்னர் துரைராசா

(முன்னாள் C.W.E. உத்தியோகத்தர்)

பிறப்பு : 12.03.1933 இறப்பு : 18.03.2018

திதி : பூர்வபக்க பிரதமை



நித்தம் நீதி மொழி கற்றுத்தந்து
நிலைகுலையாமல் நித்திய
ஒளி ஏற்றிவைத்து
கடமை கண்ணியம் கட்டுப்பாடு
உண்மை பொறுமை
போன்ற ஒழுக்க
விழுமியங்களை புரியவைத்த
எங்கள் அப்பாவின் ஓராண்டு
நினைவு 07.03.2019.
என்றும் எங்கள் மனங்களில்
நீங்காத நினைவுகளாக
ஒளி ஏற்றிய வண்ணம்....

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை காலை 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(7771)

41/54, ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

021 222 0346

இங்ஙனம் :
குடும்பத்தினர்.

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

05.02.2019 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சின்னப்பொடி குமாரு



அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடிவந்து எமது துயரத்தில் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு. இன்று (07.03.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஐந்தாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தகவல் :
குடும்பத்தினர்.

(7668)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்
**மிக்கேற்பிள்ளை ஞானேஸ்பரன்**
மலர்வு : 06.09.1949
உதிர்வு : 07.03.2009

அமரர்
**ஞானேஸ்பரன் கமில்ரன்**
மலர்வு : 28.08.1989
உதிர்வு : 07.03.2009

வசந்த கால சோலையிலே
வாசம் வீசும் காலமதில் கூவி
வந்த கொடிய கணை
இரக்கமின்றி இருமலரை
பறித்தெடுத்த பத்தாண்டு உமை
மறக்க முடியா நினைவுடனே
வாடுகின்றோம் வருவீரோ...

உங்கள் இருவரதும் பிரிவினால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள்.
அளம்பில், முல்லைத்தீவு. (C-5706) 077 041 0566

## அந்தியேட்டி அழைப்பு

கடந்த 06.02.2019 புதன்கிழமை அன்று
இறைபதம் எய்திய எங்கள் அன்புத் தந்தை

மலர்வு
10 . 07 . 1937



உதிர்வு
06 . 02 . 2019

### அமரர் பாலசிங்கம் இராசதுரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 08.03.2019 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும்.

அத் தருணம் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


வீரபத்திரர் கோவில் கிழக்கு,
உடுப்பிட்டி.

(C-5705)

தகவல் :
பிள்ளைகள்

# இந்து-கத்தோலிக்க முரண்பாடுகளை ஏற்படுத்தும் தீயசக்திகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்காதீர்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் அறிவுரை



(யாழ்ப்பாணம்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தை காரணமாக வைத்து அங்கு தமிழர் என்ற அடையாளத்துடன் அந்நியோன்னியமாக வாழ்ந்து வரும் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் விஷமத்தனமான செயற்பாடுகள் குறித்து மக்கள் விழிப்பாக இருந்து கொள்ள வேண்டும்.

இந்து- கத்தோலிக்க பதற்றத்தைத் தூண்டும் வகையில் சில தீயசக்திகள் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக நான் அறிகின்றேன். இதன் ஒரு அங்கமாக மன்னாரிலுள்ள கத்தோலிக்க குருமார்கள் மற்றும் மக்களை அச்சுறுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக அறிந்து நான் மிகவும் கவலை கொண்டுள்ளேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

தமிழ் மக்களின் உரிமைகளுக்கான பல தசாப்த கால போராட்டத்தின் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்து- கத்தோலிக்க வேறுபாடு ஏற்பட்டது கிடையாது. எமது உரிமைகளுக்கான பல்வேறு வடிவங்களிலான போராட்டங்களில் கத்தோலிக்க மக்களும் கத்தோலிக்க மத குருமார்களும் மகத்தான பங்களிப்பை வழங்கியிருக்கின்றார்கள். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் எமது மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை சர்வதேச சமூகத்துக்குக் கொண்டு சென்று நீதி மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் அளப்பரிய சேவையை கத்தோலிக்க மத குருமார்கள் செய்திருப்பது எம் எல்லோருக்கும் தெரியும். குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் முன்னாள் பேராயர் இராயப்பு யோசப் உயிர் ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் எமது அரசியல் உரிமைகளை வலியுறுத்தியும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்குமாக ஆற்றியுள்ள மகத்தான சேவையினை இந்த சந்தர்ப்பதில் நினைவு கூறுகின்றேன். அதேபோல, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குமான பணிகளில் ஈடுபட்டு 12 இற்கும் அதிகமான பாதிரியார்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள்.

பலர் காணாமல் போயிருக்கின்றார்கள். முள்ளிவாய்காலில் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு மேற்கொள்ளப்பட்ட போது கத்தோலிக்க மத குருமார்கள் மக்களின் பாது காவலர்களாக செயற்பட்டு தமது உயிர்களை இழந் திருக்கின்றார்கள். அதே போல, தந்தை செல்வா எந்த வித மத வேறுபாடுகளும் இல்லாமல் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக இறுதி வரை அயராது உழைத்தார். அவரை தமது தலைவனாக ஏற்று தமிழ் மக்கள் பெரும் ஆதரவை வழங்கினார்கள். பின்னர் தம்பி பிரபாகரன் எமது உரிமைகளுக்காக போராடிய போது எந்தவித மத வேறுபாடகளும் இன்றி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அவர் பின்னே அணிதிரண்டு அளப்பெரும் தியாகங்களைச் செய்தார்கள்.

ஆகவே, எந்தவொரு காரணத்தையும் முன்னிட்டு தமிழ் மக்கள் மத்தியில் இந்து-கத்தோலிக்க அடிப்படையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் தீய சக்திகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். எவரது தூண்டுதல்களுக்கும் ஆளாகி எந்தவொரு முரண்பாட்டு நடவடிக்கைகளிலும் தயவு செய்து ஈடுபடாதீர்கள்.

பொறுத்தார் பூமி ஆள்வார்கள். இது இந்துக்களுக்கும் பொருந்தும் கத்தோலிக்க மக்களுக்கும் பொருந்தும் என்பதை மற வாதீர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்ற சரியான நாள் எனக்குத் தெரியும்!

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டிய நாள் தனக்கு தெரியுமென, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில், நேற்று உள்நாட்டு,வெளிநாட்டு ஊடகப் பிரதானிகளுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றத்துக்காக சிறையில் இருப்பவர்கள், சிறையில் இருந்துகொண்டு தொடர்ச்சியான அச் செயற்பாட்டை முன்னெடுப்பார்களாயின், அவர்களுக்கு மரண தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

1976 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நாட்டில் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

## கொழும்பில் வாகன நெரிசல்



(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டம் காரணமாக கொழும்பு நகரமண்டப வீதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவத் தலைவர்களை விடுவிக்கக் கோரி இந்தப் போராட்டம் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த வீதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதோடு இப் பாதையை பயன்படுத்துபவர்கள் மாற்று வீதியை பயன்படுத்துமாறும் பொலிஸார் அறிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நீங்கள் என்னை ஜனாதிபதியாக கற்பனை செய்கின்றீர்களா?

## சஜித்–மகிந்த சபையில் வாக்குவாதம்



ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் ஜனாதிபதி பதவி குறித்தும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவிற்குமிடையில் நாடாளுமன்றில் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

கடந்த பாராளுமன்ற அமர்வுகளின் போது எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் சினிமாத்துறை, கலைத்துறை மற்றும் கலைஞர்களின் நிலைமைகள் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பாராளுமன்றத்தில் நேற்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ பதில் தெரிவித்துக்கொண்டிருந்த போது கடந்த ஆட்சியில் நிறுத்தப்பட்ட கலையுடன் தொடர்புபட்ட பல்வேறு வேலைத்திட்டங்களை நிறுத்தியதாகவும் இந்த ஆட்சியில் அவை மீண்டும் முன்னெடுக்கப்பட்டதாவும் தெரிவித்துக் கொண்டிருந்த நேரத்தில் திடீரென ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் காலம் உள்ளது எனக் கூறினார்.

இதன்போது பதில் தெரிவித்த அமைச்சர் சஜித், நீங்கள் என்னை ஜனாதிபதியாக கற்பனை செய்கின்றீர்களா? இதை எண்ணும் போது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. நீங்கள் இவ்வாறு நினைப்பீர்கள் என நான் கனவில் கூட நினைக்கவில்லை. ஆனால் இப்போது நான் கூறுவது ஜனாதிபதி குறித்த விடயம் அல்ல. இது உங்களின் காலத்தில் இடம்பெற்ற கலை அடக்குமுறை குறித்து நீங்களே எழுப்பிய கேள்விக்கான பதில். இந்த பதில்களை கூறும்போது உங்களால் கேட்டுக்கொண்டு இருக்க முடியவில்லை. காதுகள் வலிக்கின்றது என நினைக்கின்றேன். ஆனாலும் நான் இதனைக் கூறியே ஆகவேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

### ஐந்து ட்ரில்லியன் கடன்

# நான்கு ஆண்டுகளில் அரசு பாரிய சாதனை

## பட்ஜெட் விவாதத்தில் பந்துல

(கொழும்பு)

வெறும் நான்கு ஆண்டுகளுக்குள் ஐந்து ட்ரில்லியன் கடன் பெற்று அரசாங்கம் பாரிய சாதனை படைத்துள்ளதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் மீதான நாடாளுமன்ற விவாதத்தில் நேற்றுப் புதன்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை பொறுப்பேற்கும் போது நாட்டின் கடன் தொகை 2 ட்ரில்லியனாகக் காணப்பட்டது.

இந்தத் தொகை பத்து ஆண்டுகால எமது ஆட்சி நிறைவின் போது 7 ட்ரில்லியனாக அதிகரித்தது. ஆனால் நல்லாட்சி அரசாங்கம் பொறுப்பேற்று வெறும்நான்கு ஆண்டுகளில் கடன் தொகை 12 ட்ரில்லியனாக அதிகரித்துள்ளது.

நாட்டின் கொடூரமான யுத்தத்தை நிறைவு செய்யவும், அதன் பின்னர் வடக்கு-கிழக்கில் அபிவிருத்திகளை மேற்கொள்ளவுமே நாம் கடன் பெற்றோம்.

ஆனால், இந்த அரசாங்கத்தினர் என்ன செய்துள்ளனர். விமான நிலையங்கள் அமைத்தார்களா? நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்தார்களா? இன்றேல் யுத்தத்தை நிறைவு செய்தார்களா?" என்றும் பந்துல கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# இங்கிலாந்து வெற்றி



4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் சாம் குர்ரான்

மே.தீவுகளுக்கு எதிரான முதல் 'ரி20' போட்டியில் பேர்ஸ்டோவ் அரைசதம் கடந்து கைகொடுக்க இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மே.தீவுகள் - இங்கிலாந்து அணிகள் மோதிய முதல் 'ரி20' போட்டி செயின்ட் லூசியாவில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் களத்தடுப்பை தேர்வு செய்தார். விண்டீஸ் அணிக்கு ஷேய் ஹோப் (6), கிறிஸ் கெய்ல் (15), ஷிம்ரான் ஹெட்மயர் (14) ஏமாற்றினர். டரன் பிராவோ (28) ஆறுதல் கொடுத்தார். கார்லஸ் பிராத்வைட் (0), பேபியன் அலன் (8), அணித் தலைவர் ஜேசன் ஹோல்டர் (7) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய நிக்கோலஸ் பூரன் (58) அரைச்சதம் கடந்து கைகொடுத்தார்.

20 ஓவர்கள் நிறைவில், மே.தீவுகள் 8 விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்கள் எடுத்தது. ஆஷ்லே நர்ஸ் (13) ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து சார்பில் ரொம் குர்ரான் 36 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**பேர்ஸ்டோவ் அரைச்சதம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு அலெக்ஸ் ஹேல்ஸ் (11), ஜோ ரூட் (0). அணித் தலைவர் இயான் மார்கன் (8) ஏமாற்றினர். அபாரமாக ஆடிய ஜானி பேர்ஸ்டோவ் 40 பந்துகளில் 68 ஓட்டங்கள் (2 சிக்சர், 9 பவுண்டரி) எடுத்து உதவினார். ஜோ டென்லி (30), சாம் பில்லிங்ஸ் (18) கைகொடுக்க,

இங்கிலாந்து அணி 18.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதனையடுத்து 3 போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் இங்கிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

# சிந்து 'சோகம்'

## இங்., பட்மிண்டன் தொடரில் ஏமாற்றம்



சிந்து

இங்கிலாந்து பட்மின்டன் சம்பியன்ஷிப் முதல் சுற்றில் இந்திய வீராங்கனை சிந்து தோல்வியடைந்தார்.

இங்கிலாந்தில் இங்கிலாந்து பட்மின்டன் சம்பியன்ஷிப் தொடர் நேற்று தொடங்கியது. பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சிந்து, தென் கொரியாவின் சங் ஜி ஹியுன் மோதினர். முதல் செட்டை 16-21 என இழந்த சிந்து, இரண்டாவது செட்டில் எழுச்சி பெற்றார். இதை 22-20 என வென்றார்.

வெற்றியாளரை முடிவு செய்ய நடந்த மூன்றாவது மற்றும் கடைசி செட்டில் கடைசி வரை போராடிய சிந்து 18-21 என கோட்டை விட்டார். ஒரு மணி நேரம், 21 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில் சிந்து 16-21, 22-20, 18-21 என்ற கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

கடந்த தொடரில் அரையிறுதி வரை முன்னேறிய இவர், தற்போது முதல் சுற்றிலேயே வெளியேறினார்.

# சிங்கும் நானே... தோனியும் நானே

## கோபப்பட்ட தோனி



இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் மோதும் மூன்றாவது ஒருநாள் போட்டி நாளை ராஞ்சியில் நடக்கிறது. தோனி சொந்த மண்ணில் களமிறங்கும் கடைசி போட்டி என்பதால் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய அணி முன்னாள் அணித் தலைவர் தோனி (வயது-37), கடந்த 2007ல் 'ரி20', 2011ல் 50 ஓவர் என இரு உலக கிண்ணங்களை வென்று கொடுத்தார். கடந்த 2014 கடைசியில் அவுஸ்திரேலிய தொடரின் பாதியில் திடீரென டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றார். வெகு விரைவில் கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெறுவார் என நம்பப்படுகிறது. வரும் உலக கிண்ணத் தொடருக்கு பின் இது நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய அவுஸ்திரேலிய தொடர், சொந்தமண்ணில் தோனி பங்கேற்கும் கடைசி தொடராக இருக்கும் எனத் தெரிகிறது.

இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி நாளை தோனியின் சொந்த ஊரான ராஞ்சியில் நடக்கிறது.

**தோனி 'பெவிலியன்'**

இங்கு தோனியை கௌரவிக்கும் வகையில், இம்மைதானத்தின் ஒரு பகுதிக்கு 'எம்.எஸ்.தோனி பெவிலியன்' என பெயரிடப்பட்டுள்ளது. இதனிடையே தோனி சிறுவயது பயிற்சியாளர் கேசாப் ரஞ்சன் பானர்ஜீ உள்ளிட்ட பலர் தங்களது நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

◆ **கேசாப் ரஞ்சன், பயிற்சியாளர்**

தோனி கூச்ச சுபாவம் கொண்டவர். இப்போதும் அப்படித் தான் உள்ளார். தனது மகிழ்ச்சி, உணர்ச்சிகளை எப்போதும் மறைத்துக் கொள்வார். அவருக்காகவும், குடும்பத்திற்காகவும் கிரிக்கெட் விளையாட விரும்பினார். நாளைய போட்டிக்காக எனது சில 'பாஸ்' கிடைத்துள்ளன. தோனியின் அம்மா என்னை அழைத்துள்ளார்.

◆ **சுஷ்மா சுக்லா, தோனியின் பள்ளி ஆசிரியை**

தோனி மிகவும் அமைதியாக இருப்பார். 7, 8ஆம் வகுப்பில் இவருக்கு பயோலஜி பாடம் எடுத்தேன். அவரிடம்,' மகேந்திரா... நீ சிங்கா, தோனியா,' என கேட்பேன். இதற்கு தோனி கோபத்துடன்,' மேடம், சிங்கும் நான் தான், தோனியும் நான் தான்,' என்பார்.

# மட்ரிட் 'அவுட்'



மட்ரிட் - அஜாக்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தின்போது...

சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் இருந்து 'நடப்பு சம்பியன்' ரியல் மாட்ரிட் அணி வெளியேறியது. 'ரவுண்ட் 16' போட்டியில் 3:5 என்ற கோல் கணக்கில் அஜாக்ஸ் அணியிடம் வீழ்ந்தது.

ஐரோப்பிய கால்பந்து கழக அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் 64ஆவது சீசன் நடக்கிறது.

ஸ்பெயினின் மட்ரிட் நகரில் நடந்த 'ரவுண்ட் 16' சுற்றுக்கான 2ஆவது போட்டியில் ரியல் மட்ரிட் (ஸ்பெயின்), அஜாக்ஸ் (நெதர்லாந்து) அணிகள் மோதின.

ஏற்கெனவே 'ரவுண்ட் 16' சுற்றுக்கான முதல் போட்டியில் 2:1 என வென்ற ரியல் மட்ரிட் அணி, இப்போட்டியில் சுலப வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அபாரமாக ஆடிய அஜாக்ஸ் அணி, 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

'ரவுண்ட் 16' சுற்றுக்கான இரண்டு போட்டிகளின் முடிவில் அஜாக்ஸ் அணி 5:3 என்ற கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறியது. 13 முறை கிண்ணம் வென்ற ரியல் மட்ரிட் அணி பரிதாபமாக வெளியேறியது.



மனமுவந்து பாராட்டி
வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி
தெய்வநாயகி பிரணவன்

அவர்கள் 07.01.2019 முதல் எமது பாடசாலையில் ஆங்கில பாட ஆசிரியையாக கடமையாற்றி இலங்கை நிர்வாக சேவை (SLAS) பதவியுயர்வினை பெற்றுச் செல்லும் இவரை வாழ்த்தி நிற்பதுடன் இவரது சேவை மேன்மேலும் வளம் பெறவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/விக்ரோறியாக் கல்லூரி
சுழிபுரம்.

(7766)




புளியம்பொக்கணை
நாகதம்பிரான் ஆலய
வர்த்தக நிலையங்களுக்கான ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 21.03.2019ம்,திகதி நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்களுக்கான 'கடை ஏலம் விடுதல்' எதிர்வரும் 10.03.2019ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும் என்பதை வியாபாரம் செய்ய ஆர்வமுள்ள வர்த்தகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு:
◆ ஏலத்தின்போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
◆ பொலித்தீன் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

வீ. இராமநாதன்
தலைவர்

தி.பிரபாகரன்
செயலாளர்

(C-5707)

# வரவு-செலவுத்திட்ட முன்மொழிவு மூலம் நாய்களின் பிரச்சினைக்குத் தீர்வு-ஜே.வி.பி.



(கொழும்பு)

நாய்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க அர சாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. ஆனால் விவ சாயிகளின் பிரச்சினையைத் தீர்க்க இந்த வரவு-செலவு திட்டத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக் கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.


அதனால் நாட்டின் உண்மையான பிரச்சினையை அறிந்து முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டமாக இதனை நாங்கள் கருதவில்லை. இதனால் மக்களின் வறுமையை ஒழிப்பதாக தெரிவிக்கப்பட்டபோதும் அது நடைமுறைப்படுத்த முடியாமல் போகும் எனவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

. பாராளுமன்றத்தில்நேற்று இடம்பெற்ற இந்த வருடத்துக்கான வரவு-செல வுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அக் கட்சியின் உறுப் பினர் சுனில் ஹந்துன்நெத்தி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## ஞானசாரரை விடுதலை செய்யாவிட்டால்

# ஜனாதிபதி தேர்தலை திசை திருப்புவோம்

## பொதுபல சேனா எச்சரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஞான சார தேரரை விடுதலை செய்யவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கா விட்டால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் திருப்புமுனையை ஏற்படுத்துப் போவதாகவும் அதற்கான பலம் தம்மிடம் உள்ளதாகவும் பொதுபல சேனா எச்சரித்துள்ளது.

மேலும் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காக ஞானசார தேரரின் விடுதலையை அரசாங்கம் காலந்தாழ்த்தி வருவதாகவும் அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

பொதுபல சேனா அமைப்பு கொழும்பில் அமைந்துள்ள தனது காரியாலயத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே பத்தரமுல்லை பஞ்சாஜோதி தேரர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.(இ-7)

# வரவு-செலவுத் திட்டம் திருப்தியளிக்கின்றது!

## துமிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் மக்களுக்கு சாதகமானது எனவும், திருப்தி அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வரவு-செலவுத் திட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எவ்வாறெனினும், கட்சி என்ற ரீதியில் வரவு-செலவுத் திட்டம் குறித்த வாக்கெடுப்பில் எவ்வாறு தீர்மானம் எடுப்பது குறித்த நிலைப்பாடு பின்னர் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அனைத்து விடயங்களையும் எதிர்க்கும் எதிர்க்கட்சிக் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆக்கபூர்வமான முன்மொழிவுகளுக்கு ஆதரவளிக்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சுப் பதவிகளை வகித்து வருகின்றார் எனவும் அந்த அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை ஆதரித்து ஏனைய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை நிராகரிப்பது பொருத்தமானதல்ல எனவும் துமிந்த திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.(இ-7)


15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இரத்தினம் சிவம்

(யாழ். பல்கலைக்கழகம் -சாரதி)

திதி: பிரதமை

பிறப்பு 1950.08.28



இறப்பு 2004.03.07

கனவு என்பது காலை வரை
ஆனால்- உங்கள் நினைவு என்பது
நாங்கள் மண்ணில் உள்ளவரை...

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சீ-5696)


## இராசி பலன்

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருக்க வேண்டிய நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, விரயங்கள் கூடும் நாள்.

**இடபம்:** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பயணங்களால் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும், தொழில் வளர்ச்சிகூடும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயரும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்:** சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சுகாதார வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், நட்பொன்று பகையாகலாம், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | ராகு |
| சூரி. புத. சந் | இராசி பலன் கிரகநிலை | | |
| சுக் | சந்திராஷ்டமம் மகம்-பூசம் மதியம் 1.12 மணிக்கு மீன-சந் | | |
| சனி கேது | குரு | | |

07.03.2019

மாசி 23, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு

பிரதமை முன்னிரவு 11.46 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 8.57 மணிவரை

சுபநேரம் 7.55-9.25 மணிவரை

இராகுகாலம் 1.55-3.25 மணிவரை

வளவன்

**தனுசு:** பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம் அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி கூடும் நாள்.

**துலாம்:** தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், உதிரி வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, உடல் நலன் சீராகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய விளம்பி வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 21 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ)

# தவக்கால தியான வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)
சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய தவக்கால திருயாத்திரை தியான வழிபாடுகள் தவக்காலத்தில் வரும் சனிக்கிழமைகளில் நடைபெறவுள்ளன.

இதனடிப்படையில், எதிர்வரும் 9 ஆம் திகதி தீவக மறைக் கோட்டத்திலும் 16 ஆம் திகதி, இளவாலை மறைக் கோட்டத்திலும், 23 ஆம் திகதி கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக் கோட்டங்களில், 30 ஆம் திகதி யாழ்.மறைக் கோட்டத்திலும், ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி பருத்தித்துறை மறைக் கோட்டத்திலும் நடைபெறவுள்ளது. (5-7)




# சிவலிங்கப் பிரதிஷ்டை வேலணை மத்தியில்





(யாழ்ப்பாணம்)
சிவராத்திரியை முன்னிட்டு வேலணை மத்திய கல்லூரி வளாகத்தில் சைவ மாணவர் சபையின் ஏற்பாட்டில் சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. அத்துடன் எண்ணெய் காப்பு மற்றும் திருக்குடமுழுக்கும் சிவராத்திரி தினத்திலேயே இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் கிருபாகரன் தலைமையில் இடம் பெற்றது.

சிவராத்திரி சிறப்பு நிகழ்வில், சிவலிங்கத்தினை வடிவமைத்த சிற்பி வினோதன் ஆனந்தன் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் சிறப்பு சொற்பொழிவினை சைவ மாணவர் சபை பிரதித்தலைவர் ஜீ.ஷஜீவன் வழங்கினார். (5)

# மெய்ப்பொருள் காண்பது அறிவு சிறுகதை தொகுப்பு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)
"மெய்ப்பொருள் காண்பது அறிவு" சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் தச்சன் தோப்பு கனகம்மா நினைவாலயத்தில் யாழ். நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். கைதடி குரு சாமி வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் வெளியீட்டுரையையும் வலம்புரி பிரதம ஆசிரியர் ந.விஜய சுந்த ரம் ஆய்வுரையையும் வழங்குவர். (இ-5)

# கஞ்சா விற்றவருக்கு யாழ். நீதிமன்றில் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)
2016 ஆம் ஆண்டு 2100 கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்து விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபருக்கு நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டது.

மேற்குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய மன்னார் பேசாலையைச் சேர்ந்த 26 வயதுடைய நபருக்கெதிராக நேற்று முன்தினம் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்டபோது எதிரி தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இந் நிலையில் குறித்த இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் தனித்தனியே 20 ஆயிரம் ரூபா தண்டமும் தவறின் 20 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கப்படுவதோடு பாதிக்கப்பட்ட சாட்சிகளுக்கான பாதுகாப்பு நிதியத்திற்கு 5 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும். தவறின் 5 மாத சிறைத் தண்டனையும் வழங்குமாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் உத்தரவிட்டார். (5-10)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் சு.விவேகானந்தன் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவையாளர் சரச்சந்திரன் தவமலர் தம்பதியினர் கலந்து கொள்வர். (5-136-10)

# கணேச முன்பள்ளியின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)
யா/புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கணேச சனசமூக நிலையத் தலைவர் சி.செல்வஸ்கந்தராஜா தலைமையில் நடைபெறும்.


இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. சுலோச்சனா முருகநேசன், சிறப்பு விருந்தினராக வலி. தெற்கு பிரதேச செயலக முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ரவிபாலா, கௌரவ விருந்தினராக கொழும்பு மத்திய பொறியியல் உசாத்துணை பணியக பொறியியலாளர் சி.லாவன்யன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# 60 ஆயிரம் ரூபா நிதியுதவி

(யாழ்ப்பாணம்)
நீரிழிவு நோயாளர்களான வறிய சிறுவர்களுக்கு இன்சுலின் (Cartridge) கொள்வனவு செய்வதற்கு கனடா நேயம் பவுண்டேசனால் 60 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவரும் வறிய சிறுவர்களுக்கு இன்சுலின் (Cartridge) வழங்க நிதி உதவுமாறு யாழ்.நீரிழிவு கழகத்தினூடாக விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. (இ-5)

# பொன்னாலையில் கற்றாழை பிடுங்கிய ஐவர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு



(யாழ்ப்பாணம்)
அநுராதபுரத்தில் உள்ள கம்பனி ஒன்றுக்காக பொன்னாலையில் கற்றாழைகளைப் பிடுங்கிய இரு பெண்கள் உட்பட ஐவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வவுனியாவில் வசிக்கும் நால்வரும் அராலியைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இச் சம்பவம் இடம்பெற்றது.

பொன்னாலையில் தொடர்ந்து கற்றாழைகள் பிடுங்கிச் செல்லப்படும் நிலையில், ஏற்கனவே சில தரப்பினர் மடக்கிப் பிடிக்கப்பட்டு கடும் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த வாரம் வலி. மேற்கு பிரதேச சபையின் பொன்னாலை வட்டார உறுப்பினர் ந.பொன்ராசா, அராலி வட்டார உறுப்பினர் எஸ்.இலங்கேஸ்வரன் ஆகியோர் பொன்னாலையைச் சேர்ந்தவர்களின் உதவியுடன் தென்னிலங்கையைச் சேர்ந்தவர் நால்வரை மடக்கிப் பிடித்து கடும் எச்சரிக்கையின் பின்னர் விடுவித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மேற்படி இரு பெண்கள் உட்பட ஐவர் கற்றாழைகளைப் பிடுங்கிய போது அதை அவதானித்த சிலர் வட்டார உறுப்பினர் ந.பொன்ராசாவுக்கு தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற அவர் மேற்படி நபர்களுடன் இணைந்து இது தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த நபர்களைக்கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (5)

## கேதீஸ்வரத்தில் சிவராத்திரி வளைவு உடைப்பு

# சைவ பரிபாலன சபை கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)
சிவராத்திரிக்கு முதல் நாள் திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயிலில் கட்டப்பட்டிருந்த வளைவை கத்தோலிக்க பாதிரியார் தலைமையில் கும்பல் ஒன்று உடைத்து நொறுக்கியதுடன் சிவபெருமானின் உருவப்படங்களையும் காலால் மிதித்து சிதைத்ததாகவும் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இச் செய்தியை படித்ததும் நாம் பதைபதைத்துப் போனோம். மானிடப்பிறவி எடுத்த மனிதர்களா? இவ்வாறு செய்தார்கள். நம்ப முடியவில்லை.

அதுவும் வேதாகமத்தை பின்பற்றுகின்ற கத்தோலிக்க மக்களா? இவர்கள் பைபிளில் வேறு மதத்தவரை தூற்றவும் மதச் சின்னங்களை அழிக்கவும் ஏதும் வசனங்கள் கூறப்பட்டுள்ளதா? நடந்தேறிய இச் சம்பவத்தை சைவ பரிபாலன சபை வன்மையாகக் கண்டிக்கிறது.

அன்பு கருணை, இரக்கம், மன்னிப்பு போன்ற நற்பண்புகளை தன்னகத்தே கொண்ட கத்தோலிக்க சமயம் அடவாடித்தனங்களையும் அட்டூழியங்களையும் அடியோடு வெறுக்கிறது.

குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்பதோடு மீளவும் இவ்வாறான செயல்கள் நடைபெறாது பார்த்துக்கொள்ள வேண்டியது பங்குத் தந்தையினதும் மக்களதும் கடமையாகும் என யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை தெரிவித்துள்ளது. (இ)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)
முடிவடைந்த மற்றும் உரிமைகோரப்படாத பொருட்களின் ஏலவிற்பனை எதிர்வரும் 16 ஆம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் காலை 9.30 மணிக்கு இடம் பெறும்.

அன்றைய தினம் காலை 9 மணியிலிருந்து விற்பனைக்கான பொருட்களை மன்றின் பதிவாளர் முன்னிலையில் பார்வையிட முடியும் என்பதுடன் ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தம்முடன் தமது தேசிய அடையாள அட்டையையும் கொண்டுவருதல் வேண்டும் என்பதுடன் ஏலம் பெற்ற பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் மிக அவசியமாகும்.

ஏல விற்பனையில் முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்கள், தண்ணீர் மோட்டர், சவள்கள் என்பன விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன என பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (5-9)

# மாமனிதர் சிவநேசனின் 11 ஆம் ஆண்டு நினைவு





(யாழ்ப்பாணம்)
முன்னாள் த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அ... கி.சிவநேசனின் பதி...ராவது ஆண்டு நினைவு நிகழ்வு அவரது சொந்த ஊரான கரவெட்டி கிழக்கில் நடைபெற்றது. வாலிபர் வட்ட கழகத்தினரால் அவ்வூர் மக்களின் ஒத்துழைப்புடன் அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது. நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் சுகிர்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், மாமனிதரின் சகோதரி தனம் மற்றும் மக்கள் கழக உறுப்பினர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் திகதி மஹாசிவராத்திரி அன்று சொற்பொழிவாற்றுவதற்காக கொழும்பிலிருந்து வருகைதந்த மாமனிதர் மாங்குளம் பகுதியில் இலங்கை அரச படையின் ஆழ ஊடுருவும் அணியினரின் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (5-60)

## மின்சாரக் கதிரை அச்சுறுத்தலிலிருந்து

# மகிந்தவைக் காப்பாற்றியதால் ஐ.நாவுடன் முரண்பட முடியாது

## அமைச்சர் கிரியெல்ல விளக்கம்

(கொழும்பு)

ஐ.நாவுடன் முரண்படாமல், ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே செயற்பட வேண்டும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜெனிவாக் கூட்டத்தொடர் குறித்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நேற்று புதன் கிழமை நாடாளுமன்ற அமர்வில் கேள்வி எழுப்பியிருந்தார்.

தினேஷ் குணவர்த்தனவின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "மகிந்த ஆட்சியின்போது, இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடரில்மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



அத்துடன், இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு அனைத்துலக சமூகம் தயாராகி வந்தது.

எனவே, இங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால் சர்வதேச தடை அமுலுக்கு வந்திருக்கும்.

எமது ஆட்சியின் கீழ் தான் சர்வதேசப் பிடிக்குள் இருந்து நாட்டை மீட்டெடுத்து, மின்சாரக் கதிரை அச்சுறுத்தலிலிருந்து மகிந்தவையும் காப்பாற்றினோம். எனவே, சர்வதேசத்துடன் முரண்படமுடியாது." எனத் தெரிவித்தார். (இ-7)


## பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 31.01.2018 இற்கு முன்பு அடகு வைக்கப்பட்டு இன்றுவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 16.03.2019 தொடக்கம் 24.03.2019 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| இல | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | கொடிகாமம் | 14.03.2019 | 16.03.2019 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 02 | சாவகச்சேரி | | | |
| 03 | கிளிநொச்சி | | | |
| 04 | முல்லைத்தீவு | 14.03.2019 | 16.03.2019 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 05 | மல்லாவி | | | |
| 06 | சுன்னாகம் | 14.03.2019 | 17.03.2019 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 07 | காரைநகர் | | | |
| 08 | சங்கானை | | | |
| 09 | மானிப்பாய் | | | |
| 10 | நெல்லியடி | 14.03.2019 | 23.03.2019 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 11 | அச்சுவேலி | | | |
| 12 | பருத்தித்துறை | | | |
| 13 | மன்னார் | 14.03.2019 | 23.03.2019 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 14 | வங்காலை | | | |
| 15 | யாழ்ப்பாணம் 2ம் கிளை | 21.03.2019 | 24.03.2019 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |
| 16 | ஊர்காவற்றுறை | | | |
| 17 | திருநெல்வேலி | | | |
| 18 | கோப்பாய் | | | |
| 19 | யாழ்ப்பாணம் | | | |

(7764)


# வசதி படைத்தவர்களை மையப்படுத்தியே வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பு - டியூ

(கொழும்பு)

நடுத்தர மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் எவ்விதமான விடயங்களும் 2019 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை எனக் கம்யூனிசக் கட்சியின் பொதுச் செயலாளர் டி. யூ. குணசேகர தெரி வித்தார்.

வசதி படைத்தவர்களை மையப்படுத்தியே வரவு- செலவு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

2019 ஆம்ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் யாவும் நமது நாட்டு மக்களுக்கு பொருத்தமற்றமாகவே காணப்படுகின்றது.

வரவு-செலவுத் திட்டம் ஒரு நாட்டின் அபிவிருத்திகளை மேம்படுத்துவதாக காணப்பட வேண்டும் ஆனால் தற்போதைய வரவு-செலவுத் திட்டம் தேசிய வருமானத்திற்கும் ஒரு கட்டத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



கம்யூனிச கட்சியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


## ஆன்மீகம் சார் உளவியல் வகுப்பு விண்ணப்பம் கோரல்

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களமும் சோலைக் குயில் அலைக்காற்றுக் களமும் இணைந்து நடத்தும் அறிகை நடத்தைச் சிகிச்சை (CBT) வகுப்பு 2019 ஏப்ரல் மாதம் முதல் நடைபெறும்.

**காலம்:- சனி தோறும் 6 மாதம்**

**இடம்:- இணுவில்**

பங்கு பெற விரும்புவோர் சுய விபரத்துடன் கூடிய விண்ணப்பங்களை திருமதி.கோகிலா மகேந்திரன், கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். என்ற முகவரிக்கு 25.03.2019 இற்கு முன் கிடைக்குமாறு அனுப்பவும்.

**தொடர்பு இலக்கம்:**
**077 960 6133**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்புபடித்த,தொழில் புரிபவர்,உள்நாடு<br>தொ.இ: B/9408 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம் 4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:Civil Engineering (Tech),முகாமைத்துவஉதவியாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/9416 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L, Printers தனியார் தொழில்,<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/9410 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி 4<br>கி.பா: 10<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:B.Sc,அரசஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தகமைக்கேற்றவரன், உள்நாடு<br>தொ.இ: G/9421 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L,பாதுகாப்பு உத்தியோகத்தர்,தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: O/L,தொழில் புரிபவர், உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9411 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 26 செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:Masters in HRM, Executive தனியார்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/9420 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 38செவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:Architect, Swiss<br>எதிர்பார்ப்பு: O/L,A/Lமேல்,விவாகரத்தை ஏற்றுக் கொள்ளகூடிய திருமணமாகாதவர்கள் விரும்பதக்கது உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9413 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 2<br>கி.பா: 25<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:B.Sc, Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, வெளிநாடு<br>தொ.இ: G/9422 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்

**டாக்டர்.திருமதி.வத்சலாதேவி அமிர்தலிங்கம்**

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் யாழ்.மாவட்ட பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றி இளைப்பாறும் டாக்டர். திருமதி.வத்சலாதேசி அமிர்தலிங்கம் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும் ஆரோக்கியமாகவும் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.




ஊழியர் நலன்புரிச் சங்கம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(C-5702)



காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் ஸ்தாபக தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் நாட்டியாஞ்சலியும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராகப் பங்குகொண்ட சிறப்புப் பட்டிமன்றமும் இடம் பெற்றன.

# வர்த்தகர்கள் கொலை; மேலும் இருவர் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில்

(காலி)

ரத்கம கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பொலிஸார் இருவரை, இம்மாதம் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் இரு பொலிஸார் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களை நேற்று புதன்கிழமை காலி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாண விசேட விசாரணைப்பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காலி- ரத்கம பகுதியில் வசித்த 31 வயதுடைய ரசீன் சிந்தக்க மற்றும் 33 வயதுடைய மஞ்சுல அசேல ஆகியோர் கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி காணாமல் போயிருந்தனர்.

குறித்த வர்த்தகர்கள் இருவரும் கடத்தப்பட்டு அக்மீமன - கொனாமுல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு கொலை செய்யப்பட்ட பின்னர், அவர்களது உடல்கள் வலஸ்முல்ல - மெதகம்கொட - கனுமுல்தெனிய வனப்பகுதியில் எரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் பொதுத்தகவல் தொழில்நுட்ப பரீட்சைக்கு (GIT) 2019 தோற்றும் மாணவர்கள், அனுமதி அட்டைகளை கல்லூரியில் இன்று 7 ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பகுதித் தலைவர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (5)

# சாராயம் அருந்துபவர்கள் எவ்வகையில் அழிந்தாலும் கவலையில்லை- புத்திக



(கொழும்பு)

சாராயம் அருந்துபவர்கள் எந்த வகையில் அழிந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படப் போவதில்லை யென கைத்தொழில் வாணிபப் பிரதி அமைச்சர் புத்திக பத்திரண தெரிவித்தார்.

பால்மா விவகாரத்தில் விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான நேரத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஆனந்த அழுத்கம எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வடக்கு-கிழக்கிலுள்ள பிரச்சினைக்குத் தீர்வாக இந்த வரவு - செலவுத்திட்டம் அமையவில்லை

## செங்கல் வீட்டுத்திட்டம் குறித்து சிறீதரன் அதிருப்தி



(கொழும்பு)

வடக்கு-கிழக்கிற்கு பாரிய அளவிலான பிரச்சினைகள் இருக்கின்றபோதும் குறுகிய அளவிலேயே திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக செங்கல் வீட்டுத் திட்டங்களை மக்கள் விரும்பாதபோதும் அவற்றை திணிக்கும் வகையில் வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் தொழிற்றுறையை முன்னேற்றும் வகையிலோ, இளைஞர், யுவதிகளை கவர்கின்ற வகையிலோ இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என்றும்அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# 2019 வரவு-செலவுத் திட்டம் வரவேற்கத்தக்கது - றிசாத்



(கொழும்பு)

வரவு- செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்ட விடயங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் நிறைவேற்றும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

அத்துடன் வரவேற்கத்தக்க வரவு-செலவுத் திட்டமாகவே இதைக் காண்கின்றோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சரு மான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டம் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன் வரவு-செலவுத் திட்டத்தில் சாதாரண மக்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அரச ஊழியர்கள், விவசாயிக ளுக்கும் பல நன்மைகள் இருக்கின்றன. அதே போன்று வடக்கில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மக்களை மீள் குடியேற்ற தேவையான வளங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த வரவு-செலவுத் திட்டத்தை மிகவும் வரவேற்கத்தக்க வரவு-செலவுத் திட்டமாகவே நாங்கள் காண்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி கொலைச் சதித்திட்டம் நாலக சில்வாவின் மறியல் நீடிப்பு



(கொழும்பு)

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள அவர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார்.

இந் நிலையில் குறித்த சந்தேக நபர் நேற்று புதன் கிழமை மீண்டும் கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இதன்போதே அவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, குறித்த குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்பட்ட இந்தியர் முழுமையாக குற்றச் சாட்டுக்களிலிருந்து விடுக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

# பாரிய அபிவிருத்தி புரட்சிக்கான வரவு - செலவுத் திட்டம்-ஹக்கீம்



(கொழும்பு)

பாரிய அபிவிருத்தி புரட்சியொன்றை ஏற்படுத்துவதற்கான வரவு- செலவுத் திட்டமாக இதைக் காண்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எந்த அரசாங்கமும் இது வரை காலம் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்காத சம்பள அதிகரிப்பை இந்த அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. ஆட்சிக்கு வந்த ஆரம்பத்திலே 10 ஆயிரம் ரூபா அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. தற்போது இரண்டாயிரத்து 500 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று பாரிய அபிவிருத்தி புரட்சியொன்றை ஏற்படுத்துவதற்கான அனைத்து துறைகளுக்குமான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஹக்கீம் தெரிவித்தார். (இ-7)

# வரவு - செலவுத்திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்துவது சவாலானது

## சு.கவின் செயலர் தயாசிறி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நிலையான வருமான வழியை அமைத்துக் கொள்ளாவிட்டால் வரவு-செலவுத் திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்துவது பாரிய சவாலாகும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தில் பல முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவது பாரிய சவாலாகும். ஏனெனில் பாராளுமன்றத்தில் எதையும் தெரிவிக்கலாம்.

ஆனால் அதனை நடைமுறைப்படுத்த நிலையான வருமானம் இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-7)

# இலஞ்ச ஊழலுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம்



(ஏறாவூர்)

இலஞ்ச ஊழல்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரி மட்டக்களப்பில் அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுப் புதன்கிழமை காலை முதல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஊழலுக்கு எதிரான மக்கள் இயக்கம் என்ற பெயரில், இலஞ்ச ஊழல் அற்ற சமூகத்தை உருவாக்குவோம் எனும் தலைப்பில் இந்த அடையாள உண்ணாவிரத போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செயலாளர் இந்த பகுதிகளில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் இது தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முறையிட்டுள்ள நிலையில் குறித்த முறைப்பாட்டாளர்களை அச்சுறுத்தும் வகையில் பிரதேச செயலாளர் செயற்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்நிலையில், பிரதேச செயலாளர் மீதான இலஞ்ச. ஊழல் மோசடி குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யக் கோரியே தாம் இந்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஜனாதிபதி இலஞ்ச ஊழல்களை ஒழிக்கும் வகையில் முன்னெடுத்துவரும் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கும் நோக்கிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# மகிந்தவை ஓரம்கட்டிய நோர்வே சீற்றத்தில் கூட்டு எதிரணியினர்



(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்கச் செயலர் மரியன் ஹகென், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்காதமை, கூட்டு எதிரணியினருக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர், கெஹலிய ரம்புக்வெல,

"இலங்கை வந்துள்ள நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்கச் செயலர் மரியன் ஹகெனுடனான சந்திப்புக்கு, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை, கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் அழைக்கவில்லை.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடன் நிச்சயமாக ஒரு சந்திப்புக்கு, நோர்வே தூதரகம் ஏற்பாடு செய்யும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகளிர் தினமும் சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பொதுநூலகத்தின் சர்வதேச மகளிர் தினமும் "வழுக்கை" கையெழுத்து சஞ்சிகை வெளியீடும் நாளை 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அளவெட்டி பொதுநூலக மண்டபத்தில் மல்லாகம் உப அலுவலகப் பொறுப்பதிகாரி ரி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மகாஜனக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் திருமதி சி. அனந்தசயனன், சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேச சபைச் செயலாளர் இ.பகிரதன், கௌரவ விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேசசபை CMA திருமதி உ.யோகேஸ்வரி, அளவெட்டி ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர் திருமதி கு.தயாளினி ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# கண்ணிவெடிகளை அகற்ற 60 மில். குரோனர்களை வழங்கும் நோர்வே

(கொழும்பு)

இலங்கை கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு 60 மில்லியன் குரோனர்களை வழங்க நோர்வே முன்வந்துள்ளது.


இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்க செயலர் மரியன் ஹனென், நேற்று முன்தினம் கொழும்பில் இதனை அறிவித்தார்.

நேற்று முன்தினம் காலை கொழும்பு வந்த அவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதன்போதே, கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைக்காக நோர்வேயின் நிதியுதவி பற்றிய அறிவிப்பை வெளியிட்டார். (இ-7)



# பாராளுமன்றில் விருந்துபசாரம் பிரதமர்,மகிந்த பங்கேற்பு



(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நிதிய மைச்சர் மங்கள சமரவீரவினால் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள், விருந்தினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# புலிக்கொடியுடன் லண்டன் விமான நிலையத்தில் இலங்கைத் தமிழர்கள் இருவர் கைதாகினர்!

## விசாரணையின் பின் விடுவிப்பு

(லண்டன்)

லண்டன் விமான நிலையத்தில் பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கை தமிழர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஜெனிவாவிற்கு செல்லவிருந்த நிலையில் குறித்த இலங்கையர்கள் ஹீத்ரோ விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தனர்.

36 வயது வாகீசன் தங்கவேல் என்ற இலங்கைத் தமிழர் உள்ளிட்ட இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து விடுதலைப் புலிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட கொடி ஒன்றை பொலிஸார் பறிமுதல் செய்திருந்ததாக கூறப்படுகின்றது.

இந்தநிலையில் கைது செய்யப்பட்டவர்களிடம் சில மணித்தியாலங்கள் விசாரணை முன்னெடுக்கப்பட்டதாகவும், விசாரணையைத் தொடர்ந்து அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், வாகீசன் வீட்டில் பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டதாகவும், இதன்போது அவரின் மடிக்கணனி உள்ளிட்ட சில ஆவணங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத்தொடர் தற்போது ஜெனிவாவில் இடம்பெற்று வரும் நிலையில், பேரவைக்கு வெளியில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபடுவதற்கு சென்ற போதே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றமைக் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நோர்வேயின் இலங்கைக்கான வெளிவிவகார அமைச்சர் கொண்ட குழுவினர் முகமாலை விஜயம்




(பரந்தன்)

நோர்வேயின் இலங்கைக்கான வெளிவிவகார அமைச்சர் அடங்கிய குழுவினர் கிளிநொச்சி முகமாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். குறித்த குழுவினர் நேற்று குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை பார்வையிட்டதுடன், தொடர்ந்து செயற்பாடு தொடர்பில் நிறுவனத்தினருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் இவ் விஜயம் முக்கியம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர்,

இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக நோர்வே அரசாங்கம் இலங்கைக்கு 3 ஆண்டுகளுக்கு உதவ உள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பில் பிரதமருக்கு நோர்வே அரசு வாக்குறுதி அளித்துள்ளதாகவும் தெரிவித்தார். இப் பகுதியில் கண்ணி வெடிகளை அகற்றி முடிப்பதற்கு முயல்வதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

மிகவும் பயங்கரமான வெடி பொருட்கள் அப்பகுதியில் காணப்படுவதாக வும், அவர் தெரிவித்தார். குறித்த 3 ஆண்டு காலப் பகுதிக் குள் கண்ணிவெடிகளை அகற்றி முடிப்பது தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார். (2-312)

# பூனையைக் காப்பாற்ற முயற்சித்து தன் உயிரை தியாகம் செய்த சாரதி

(கொழும்பு)

வீதியைக் கடந்து சென்ற பூனை ஒன்று விபத்துக்குள்ளாவதனை தடுப்பதற்கு முயற்சித்த சாரதியொருவர் விபத்தில் சிக்கி பலியாகியுள்ளார்.

அம்பலங்கொட, ஹங்கம மித்தெனிய பிரதேசத்தில் அண்மையில் இந்த விபத்துச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஆட்டோவில் பயணம் செய்த நபர், வீதியைக் கடந்து சென்ற பூனை விபத்தில் சிக்குவதனை தவிர்க்க முயற்சித்த போது, சாரதி ஆட்டோவிலிருந்து கீழே வீழ்ந்துள்ளார்.

இவ்வாறு வீதியில் வீழ்ந்த ஆட்டோ சாரதி எதிரில் வந்த மோட்டார் வாகனத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகி யுள்ளதுடன், எம்பிலிபிட்டி வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

40 வயதான கமகே நிசாந்த என்ற நபரே சம்பவத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் வண்டியின் சாரதியான அஜித் சிசிர குமார என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (2)


# முதல் தடவையாக இணையவழி மூலம் பொது தகவல் தொழில் நுட்பப் பரீட்சை

(கொழும்பு)

பொது தகவல் தொழில்நுட்ப (GIT) பரீட்சையை இம்முறை முதலாவது தடவையாக இணையவழி மூலம் நடத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

குறித்த பரீட்சை இம் மாதம் 11 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் உள்ள 655 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம் பெறும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (2-7)

# கேப்பாபிலவு மக்களின் போராட்ட களத்தில் முல்லை.பங்கு தந்தையர்கள்,அருட்சகோதரிகள்




(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கேப்பாபிலவு மக்கள் தங்களுடைய பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி கடந்த 2017.03.01 அன்று ஆரம்பித்த கவனயீர்ப்புப் போராட்டமானது நேற்று 736 ஆவது நாளாக இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் மக்களின் போராட்ட இடத்திற்கு நேற்றுக் காலை சென்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் ஆகியோர் அம்மக்களின் நிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்ததோடு அவர்களோடு கலந்துரையாடி அவர்களுடைய போராட்டத்திற்கு பூரண ஆதரவை வழங்கியுள்ளார்கள். (2-281)

# வீதியை விட்டு விலகிய பேருந்து விபத்துக்குள்ளானது;38 பேர் காயம்

அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரியில் இருந்து புறப்பட்ட நான்கு பேருந்துகளில் ஒன்று மாவனல்லை கடுகண்ணாவை - அம்பலம பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்று ள்ளது.

சுற்றுலா சென்ற 4 பேருந்துகளில் ஒன்று வீதியை விட்டு சரிந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த பேருந்தின் ஆசிரியர் பயிற்சி கலாசாலையை சேர்ந்த பயிற்சி ஆசிரியர்கள் குழாம் பயணித்ததாகவும் விபத்துக்குள்ளாகிய ஆசிரியர்கள் மாவனல்லை மற்றும் பெரதெனியா வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

குறித்த விபத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில் பெண்கள் (ஆசிரியைகள்) உட்பட சுமார் 38 பேர்கள் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். உயிழந்தவர் பேருந்தின் நடத்துநர் ஆவார்.

விபத்து குறித்த விசாரணையை மாவனல்லை பொலிசார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# இரணைமடுக்குள புனரமைப்பில் ஏற்பட்ட குறைபாட்டினால் அதிகளவு நீர் வீண் விரயம்

## விவசாயிகள் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சுமார் இரண்டாயிரத்து 178 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட போதும் அதன் புனரமைப்புக்களில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக கடந்த 15 நாட்களுக்கும் மேலாக குளத்திலுள்ள அதிகளான நீர் வெளியேறி வீண் விரயமாகி வருவதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் அவர்களின் விவசாயத்தை தடையின்றி மேற்கொள்வதற்கும் இந்த இரணைமடுக்குளம் பாரிய பங்களிப்பைச் செலுத்தும் என்ற அடிப்படையிலும் 34 அடியாக காணப்பட்ட குளம் தற்போது அபிவிருத்திக்கு பின் 36 அடியாக உயர்த்தப்பட்டது.

இவ்வாறு பெருந்தொகை நிதியில் புனரமைக்கப்பட்டு கடந்த டிசெம்பர் மாதம் ஜனாதிபதியால் கையளிக்கப்பட்ட இக்குளத்தில் புனரமைப்புக்களில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக நாளாந்தம் பெருமளவான நீர் வெளியேறி வருகின்றது.

அதாவது இரணைமடுக்குளத்திலிருந்து உருத்திரபுரம், முரசுமோட்டை, ஊரியான் போன்ற பகுதிகளுக்கான நீர் விநியோக வாய்க்காலின் பிரதான கதவு உரிய முறையில் புனரமைக்கப்படாமையினால் இவ்வாறு நீர் வெளியேறி வருகின்றது.

இவ்வாறு வாய்க்காலினால் வெளியேறும் நீரினால் மூன்று நாட்களுக்கு ஒரு தடவை கிளிநொச்சிக்குளம் நிரம்பி வான் பாயும் அளவிற்கு காணப்படுகின்றது.

இதைவிட, முரசுமோட்டை பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் வயல் நிலங்களில் அதிகளவான நீர் வீண் விரயமாகிக் காணப்படுகின்றது.

இதுவரை ஏறத்தாழ இரண்டாயிரம் ஏக்கர் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளக்கூடிய நீர் வெளியேறியிருப்பதாக விவசாயி கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்டப் பிரதி நீர்ப்பொறியியலாளர் என்.சுதாகரனை தொடர்பு கொண்டு வினவியபோது, இரணைமடு நீர்ப்பாசனப்பொறியியலாளரிடம் இவ்விடயம் தொடர்பில் அறியுமாறு குறிப்பிட்டிருந்தார்.

அவரிடம் வினவிய போது, அவரும் உரிய பதில் வழங்கவில்லை. இது தொடர்பில் திட்டப் பணிப்பாளர் பிறேம்குமாரைக் கேட்டபோது, அவரும் உரிய பதிலை வழங்க மறுத்தார்.

இரணைமடுக்குளத்தில் புனரமைப்பில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும் வட்டக்கச்சி, பிரதேசத்திற்கான பிரதான நீர் விநியோக வாய்க்கால் கதவு மற்றும் அதன் புனரமைப்புக்களில் குறைபாடுகள் காணப்படுவதாகவும் அதேபோன்று இரணைமடுக்குளத்திலிருந்து கிளிநொச்சிக்குளம், உருத்திரபுரம் முரசுமோட்டை ஆகிய பகுதிகளுக்கு பிரதான நீர் விநியோக வாய்க்காலின் கதவு புனரமைப்பில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாகவே இவ்வாறு குளத்தின் நீர் வெளியேறி வருவதாகவும் இது தொடர்பில் ஒப்பந்தக்காரர்களை அழைத்து சுட்டிக்காட்டியுள்ள போதும், அதனைப் புனரமைப்பதில் காலதாமதங்கள் காணப்படுவதாகவும் இவ்வாறு நீர் வீண் விரயமாவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என விவசாய சம்மேளனத்தின் தலைவர் மு. சிவமோகன் தெரிவித்துள்ளார். (2-315)

# கட்டாக்காலி நாய்களுக்கு இயக்கச்சியில் சரணாலயம்

(பளை)

கட்டாக்காலி நாய்களுக் கான சரணாலயம் இயக்கச்சிப் பகுதியில் அமையவுள்ளதாக சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்களைப் பாதுகாக்கவென இயக்கச்சி புளியடிச் சந்தியிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள 20 ஏக்கர் காணி இத் திட்டத்திற்காகப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவ ரினால் வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவனின் கவன த்திற்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளது. (2-272-10)

# புதைத்த இரும்பு பட்டறையின் பாகங்களை எடுத்த இருவர் கைது

(பனிக்கன்குளம்)

முள்ளிவாய்க்கால் பகுதியில் போரின் போது இடம்பெயர்ந்து பொருட்களை புதைத்துவிட்டு சென்ற ஒருவர் அவரது இரும்பு பட்டறையின் பாகங்களை பொலிஸாரின் அனுமதி இன்றி எடுக்க முற்பட்ட வேளை முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. முள்ளிவாய்க்கால் பகுதியில் தனது தொழில் செய்த இரும்பு பட்டறைகள் போரின் இறுதி நாட்களில் விட்டுசென்றுள்ளதாக மீள்குடியேறிய காலத்தில் கிராமசேவகர் ஊடாக முறைப்பாடு ஒன்று பதிவு செய்த நபர் ஒருவர் பொலிஸாரின் அனுமதி இன்றி முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் குறித்த தனது இரும்பு இயந்திரத்தின் பாகங்களை தோண்டி எடுக்க முற்பட்ட வேளை பொலிஸாரால் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் தோண்டி எடுத்த இரும்பு பட்டறையின் பாகங்களும் மீட்கப் பட்டுள்ளன.

இது குறித்து முல்லைத்தீவு பொலிஸார் எடுக்கப்பட்ட இரும்பின் பாகங்களையும் கைதுசெய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள்.

இதன்போது இருவருக்கும் தலா ஒரு இலட்சம்ரூபா ஆட்பிணையில் விடுதலை செய்த நீதிமன்றம் குறித்த வழக்கினை எதிர்வரும் 02.04.19 அன்று திகதியிட்டு அறிவித்துள்ளது. (2-281)



வவுனியா கோவில்குளம் ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் மஹா சிவராத்திரி விழா புடைசூழ இடம்பெற்றதைப் படங்களில் காணலாம்.

# மன்னாரில் கிளைமோர் மீட்பு!



மன்னார் பெரியகடை பள்ளிவாசல் ஒழுங்கை மற்றும் மீன் சந்தை பகுதிக்குச் செல்லும்பிரதான பாதை சந்தியில் இருந்து கிளைமோர் வெடி பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபை ஊழியர்களினால் நேற்றுக் காலை மன்னார் பெரிய கடை பகுதிகள் துப்புரவு செய்யப்பட்ட போதே மேற்படி 3 கிலோகிராம் அளவுடைய கிளைமோர் ஒன்று குப்பைகளுடன் காணப்பட்டதை அடுத்து குறித்த ஊழியர்கள் குப்பைகளை அகற்றாது பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த பகுதியில் குப்பைகளோடு குப்பைகளாக குறித்த கிளைமோர் காணப்பட்ட நிலையில் பாதுகாப்பான முறையில் அகற்றப்பட்டது.

அதேநேரத்தில் குறித்த பகுதியில் அதிகளவிலான பழைய இரும்புகள் கொள்வனவு செய்யும் கடைகள் காணப்படுகின்றமையினால் பழைய இரும்பு பொருட்களுடன் கலந்து குறித்த கிளைமோரும் வந்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த வெடி பொருள் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-285)

## சதொச விற்பனை நிலையத்தை வர்த்தக கைத்தொழில் அமைச்சர் பார்வை

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் உள்ள சதொச விற்பனை நிலையத்தின் செயற்பாடுகளை வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அடுத்த மாதம் தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பு வரவுள்ள நிலையில் வவுனியாவிற்கு விஜயம் செய்த அமைச்சர் நெளுக்குளம் பகுதியில் உள்ள சதொச விற்பனை நிலையத்திற்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்.

இதன்போது பொருட்களின் தரம், பொருட்களின் விலைகள் என்பவற்றை பரிசீலித்ததுடன் அதன் செயற்பாடுகள் தொடர்பாகவும் அங்கு கடமையாற்றுபவர்களுடன் கலந்துரையாடினார்.

அமைச்சருடன் இணைப்பாளர் முத்து முகமது, நகரசபை உறுப்பினர்களான அப்துல் பாரி, லரீவ் உள்ளிட்டோரும் உடன் சென்றிருந்தனர். (2-250)




## பகிரங்க ஏலவிற்பனை

(மன்னார்)

வட மாகாண மேல் நீதி மன்றத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் பகிரங்க ஏலவிற்பனை நடைபெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார். (2)

## வீட்டுத்திட்டம் வழங்குமாறு கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



வவுனியா - இராசேந்திரங்குளம், விக்ஸ்காடு பகுதி மக்கள் வீட்டுத்திட்டம் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர். குறித்த ஆர்ப்பாட்டம் வவுனியா பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 10 வருடங்களாக எமக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. தற்காலிக கொட்டகைகளிலேயே வசித்து வருகின்றோம்.

சுமார் 47 குடும்பங்கள் வசித்து வருகின்ற எமது கிராமத்தில் பலருக்கு வீட்டுக்கான பதிவுகள் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டபோதும் அது வழங்கப்படவில்லை.

காணிகளுக்கு ஆவணங்கள் இன்மையால் வீட்டுத் திட்டம் வழங்க முடியாதென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எனவே நீண்ட காலமாக வீடில்லாமல் வசிக்கும் எமக்கு வீடுகளை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நிரந்தர வீடும், அடிப்படை வசதியும் வேண்டும், காணிக்கான போராட்டம் முடிந்தது, இது வீட்டிற்கான போராட்டம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை பிரதேச செயலாளர் கா. உதயராஜா சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் கரைச்சி அ. சே. ஓ. ஊ. ந. நிதியத் தலைவர் சி. சந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலர் த. முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி. சதீஸ்கரன் தமிழினி, கரைச்சி உதவித் திட்டப் பணிப்பாளர் ச. பி. அமல்ராஜ், கணக்காளர் ப. லுரேந்திரன், நிர்வாக அலுவலர் ச. இராமமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அன்றையதினம் புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறும். கரைச்சிப் பிரதேச அரச சேவை ஓய்வூதியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் ஓய்வூதிய அட்டை, தேசிய ஆள் அடையாள அட்டை என்பனவற்றுடன் சமுகமளிக்குமாறு கரைச்சிப் பிரதேச அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிர்வாக சபையினர் கேட்டுக் கொள்கின்றனர். (2-254)

## சட்டவிரோத மணல் அகழ்வினால் விவசாய நிலங்கள் அழிவடையும் நிலை

### கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சோரன் பற்று கிராமத்தில் தொடர்ந்தும் இடம்பெறும் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சோரன்பற்று கிராமத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு இப்பகுதியில் தினமும் இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் சட்டவிரோதமாக மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு டிப்பர் வாகனங்களில் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன எனத் தெரிவித்துள்ள இப்பகுதி மக்கள் சோரன் பற்று கிராமத்தை அண்டிய ஆற்றுப்படுக்கைகள் மற்றும் இப்பகுதியில் உள்ள குளங்கள் என்பவற்றில் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவதாக இப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதாவது சோரன்பற்றுக் கிராமத்தில் காணப்படுகின்ற யாவில்குளம், வட்டக்குளம் பொதுமயானம் ஆகிய பகுதிகளில் அதிகளவான மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இதனால் விவசாய செய்கைகள், விவசாய நிலங்கள் அழிவடையும் அபாய நிலை காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-315)

### மஹா சிவராத்திரியன்று

## திருக்கேதீஸ்வரத்தில் தங்கநகைகள் அறுப்பு

(மன்னார்)

மஹா சிவராத்திரி தினத்தன்று இரவு மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இரண்டு பக்தர்களின் தங்க நகைகள் அறுக்கப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 4 ஆம் திகதி மஹா சிவராத்திரியை முன்னிட்டு மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் அதிகளவான பக்தர்கள் குழுமி இருந்தனர்.

இதனைப் பயன்படுத்தி இரவு 10 மணிக்கும் 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் யோகபுரம் மல்லாவியைச் சேர்ந்த செல்வராசா சந்திரகுமாரி என்பவரது மூன்றரை பவுண் நிறையுடைய தாலிக் கொடியும் மன்னாரைச் சேர்ந்த பெண்மணி ஒருவரின் ஒன்றரை பவுண் நிறையுடைய சங்கிலி ஒன்றும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ம-30)

## புதுமுறிப்புக்குளத்தின் கீழ் 846 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளல்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்புக் குளத்தின் கீழ் 846 ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை செய்கை பண்ணப்படவுள்ளது. இந் நிலையில் இதற்கான கூட்டம் கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் புதுமுறிப்பு பொது நோக்கு மண்டபத்தில் கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் ச. சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆரம்ப உரை நிகழ்த்திய கரைச்சிப் பிரதேச செயலர் த. முகுந்தன் விவசாயிகள் கூட்டத் தீர்மானங்களுக்கமைய செயற்பட்டு உச்ச அளவிலான அறுவடையை பெற வேண்டுமெனத் தெரிவித்தார். பிரதி விவசாயப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், தனித்து நெற்பயிரில் மட்டுமே கவனம் செலுத்தாமல் ஏனைய உப உணவுப் பயிர்களையும் செய்கை பண்ணுதல் சிறந்தது.

நெற் பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தக் கூடிய 10 நாற்று நடுகை இயந்திரங்களும் 5 வரிசை முறை நடுகைக்கான இயந்திரங்களும் இம் மாவட்டத்தில் உள்ளது. இவற்றைப் பயன்படுத்தி சிறப்பான விளைச்சலைப் பெற முடியும். கண்டமாகப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டால் நோய்த் தாக்கம் குறைவடைவது டன் சிறந்த அறுவடையை பெறலாமெனவும் தெரிவித்தார். கமநல காப்புறுதிச் சபை பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், தற்பேரது 5 ஏக்கர் வரையிலான நெற்செய்கைக்கு இலவச காப்புறுதித்திட்டம் நடைமுறையிலுள்ளதால் அனைத்து விவசாயிகளும் அதனைப் பயன்படுத்த முடியுமெனத் தெரிவித்தார். பிரதேச அபிவிருத்தி வங்கி மூலமான தானியக்களஞ்சியம் மூலமாக விவசாயிகள் நன்மையடைய முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

19 அடிகொள்ளளவு நீரைக் கொண்ட குளத்தில் தற்போது 18 அடி 2அங்குல நீர் உள்ளதால் விதைப்பிற்கான ஏக்கர் 846 எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி மத்திய வகுப்பு காணிகளுக்கு 240 ஏக்கரும் 5 ஏக்கர் கொண்ட ஒரு காணிக்கு 5 ஏக்கரும் சிறு மத்திய வகுப்பு காணிகளுக்கு 25 ஏக்கரும் புது முறிப்பு காணிகளுக்கு 354 ஏக்கரும் ஜெயந்திநகர் காணிகளுக்கு 204 ஏக்கரும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (2-254)

## 12 கிராமங்களில் புனரமைக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் செயலிழப்பு

(கண்டாவளை)


முல்லைத்தீவு வவுனிக் குளத்தின் கீழ் உள்ள 12 கிராமங்களில் பல மில்லின் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட ஏற்றுநீர்ப்பாசனத்திட்டங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழான குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

யுத்த காலத்தில் இவை முழுமையாக சேதமடைந்து கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

யுத்தம் நிறைவுக்கு வந்து மக்கள் மீள்குடியேறியதையடுத்து செயலிழந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்கள் மீள்புனரமைப்புச் செய்யப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்ட நிலையில் அவை கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

அதாவது செல்வபுரம், பாண்டியன் குளம், கரும்புள்ளியான், விநாயகபுரம், பாலிநகர், கறுப்பிகுளம், புகழேந்தி நகர், பாரதி நகர், திருநகர், வளநகர், கொத்தம்பியா குளம் ஆகிய பகுதிகளில் 470 விவசாயக் குடும்பங்கள் நன்மையடையக்கூடிய நிலையில் மேற்கொள்ளப்பட்ட 12 ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்கள இவ்வாறு செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன. (2-315)



"2019 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது"

# வரவு-செலவுத்

## "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா –

## வறியோரைப் பர

### முன்னுரை

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, எனது இரண்டாவது வரவு- செலவுத்திட்டத்தினை இச் சபைக்கு சமர்ப்பிப்பதனையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

❖ 2018 இன் இறுதியில் ஏற்பட்ட அரசியல் ஸ்திரமற்ற நிலைமை முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் நாட்டின் பொருளாதாரமானது உறுதிப்படுத்தப்பட்டு வளர்ச்சியை நோக்கி நகர்வதினை நாம் காணலாம் என்பதனை இச்சபைக்குத் தெரிவித்துக் கொள்வதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் மிகவும் இருண்ட 52 நாட்களின் பின்னர் ஸ்திர நிலைமையினை மீண்டும் அடைந்து கொள்வதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டியேற்பட்டது.

❖ தொடர்ச்சியான பல வருடங்களாக ஏற்பட்ட பல வரட்சியினால் கிராமிய வருமானம் வீழ்ச்சியடைந்து முழுப் பொருளாதாரமும் பாதிப்படைந்த நிலையில் 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி இடம் பெற்ற நிகழ்வு பொருளாதாரத்தினை மேலும் மோசமாகப் பாதித்தது. உலக எண்ணெய் விலை இரட்டிபபாகியதுடன் ஐக்கிய அமெரிக்க பெடரல்ரிசேவ் ஆனது.

வட்டி வீதங்களை மிக விரைவில் அதிகரித்தது. இவ்வாறான உள்நாட்டு வெளிநாட்டு சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்த அதேவேளை எமது அரசாங்கம் பொருளாதார ஸ்திரத்தன்மையினையும் ஏற்படுத்தியுள்ளது.

❖ 2018 ஒக்டோபர் இறுதியிலிருந்து உலக எண்ணெய் விலையானது பாரியளவு வீழ்ச்சியடைந்திருந்ததுடன் ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேவ் ஆனது குறைந்த வட்டி வீதங்களுக்கான சமிக்ஞையினைக் காட்டியதுடன் நுகர்வானது பழைய நிலைமைக்குத் திரும்பியது. இந்நிலைமையினால் இலங்கை பெற்றுக் கொள்ள முடியுமாகவிருந்த பொருளாதார வளர்ச்சியினை 2019 வரையில் அனுபவிக்க முடியாது போனது.

துரதிர்ஷ்டவசமாக, நாம் அரசியல் சதியொன்றிற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டதால் மேற்குறித்த நன்மைகளின் விளைவுகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பினை இழந்தோம்.

❖ இலங்கையின் மீதான நம்பிக்கை இழந்ததன் விளைவாக, அந்த 52 நாட்களுக்குள் எமது கடன் மற்றும் பங்குச் சந்தையிலிருந்து மூலதன வெளியேற்றம் பாரியளவு இடம் பெற்றதுடன் மிகவும் கடினமான உழைப்பின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட எமது வெளிநாட்டு ஒதுக்குகளிலிருந்து பல பில்லியன் டொலர்களை இழக்க வேண்டியேற்பட்டது.

இக் காலப்பகுதியில், ஏனைய வளர்ந்துவரும் சந்தைகளின் நாணயங்கள் மதிப்பேற்றமடைந்த அதேவேளை, எமது நாணயத்தின் பெறுமதியானது வரலாற்றில் மிகக் குறைந்த மட்டத்திலான வீழ்ச்சியினை பதிவுசெய்தது.

❖ இலங்கையின் கடன் தரப்படுத்தலானது கீழ் மட்டத்திற்குத் தள்ளப்பட்டதன் விளைவாக .எமது வெளிநாட்டுக் கடன் பெறுகைச் செலவினம்இரட்டை இலக்க மட்டத்திற்கு அதிகரித்துள்ளது. 2019 இல் வெளிநாட்டுப்படுகடன் மீள் கொடுப்பனவாக 5.9 பில்லியன் ஐ.அ. டொலரினை மீள் நிதியளிக்க வேண்டியிருப்பதனால் மிகவும் சாதகமற்ற தன்மை உருவாகியுள்ளது. இலங்கை சிறந்த பிரயாணம் செய்யக்கூடிய இடமாக "லோன்லி பிலனற்" சஞ்சிகையினால் தரப்படுத்தப்பட்டதன் பின்னரும் கூட, அப்போது காணப்பட்ட அரசியல்நிலைமையின்காரணமாக சுற்றுலா பயணிகளின் வருகையானது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

இந்நிலையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு புதிய பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

❖ நிலைமை இவ்வாறிருக்க, 2018 டிசெம்பர் 17 ஆம் திகதி நாம் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தோம். எமது வெளிநாட்டுத்துறைக் காரணிகளுக்கு ஏற்பட்ட சேதத்தினை நாம் தற்பொழுது சீர்படுத்தியுள்ளதுடன் சந்தைகள் கடந்த இரண்டு மாதங்களில் நம்பிக்கை தரக்கூடிய வகையில் மீள் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இன்று எமது வெளிநாட்டுக் கடன் பெறுகை செலவினமானது 200 அடிப்படை புள்ளிகளுக்கு மேலாக வீழ்ச்சியடைந்துள்ளது.

எமது பொருளாதாரத்தினை நோக்கி வெளிநாட்டு மூலதனமானது நகர்ந்துள்ள அதேவேளை ஜனவரியிலிருந்து அரசாங்க பிணையங்கள் மீது ரூபா 3,400 மில்லியன் வெளிநாட்டு நிதியானது உட்பாய்ச்சப்பட்டுள்ளதுடன் இன்று வரை ரூபாவானது 1.5 சதவீதத்தினால் மதிப்பேற்றம் அடைந்துள்ளது.

❖ எனவே, அரசியல் சதியினால் ஏற்பட்ட பல்வேறுபட்ட பாதிப்புக்களை நிவர்த்திசெய்ய வேண்டியுள்ளதுடன், பொருளாதாரம் மீண்டும் ஸ்திரப்படுத்தப்பட வேண்டியுள்ளது. பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு நாம் மேற்கொண்ட பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான வாய்ப்பினை நாம் தற்பொழுது பெற்றுள்ளோம்.

❖ அரசிறை முகாமைத்துவம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றது. ஐந்து தசாப்தங்களில் முதல் முறையாக 2017 இல் ஆரம்ப மிகையினை நாம் அடைந்துள்ளதுடன், இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6 சதவீத வளர்ச்சியாகும்.

2015 இல் காணப்பட்ட -2.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018 இல் இது பாரியதொரு முன்னேற்றமாகும். பிரதான உலக நுகர்வுப் பொருட்களின் விலைகள் அதிகரித்த போதிலும் பணவீக்கமானது கட்டுப்பாட்டுக்குள் முகாமை செய்யப்பட்டுள்ளது. 2017 இல் என்றுமில்லாத சிறந்த ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை நாம் அடைந்துள்ளதுடன் 2018 இல் அதற்கான உத்வேகம் அதிகரித்துள்ளது.

இந்நிலைமை பொருளாதாரத்தினை பாரிய வெளிநாட்டு உட்பாய்ச்சலினை நோக்கி மீள் ஒருமுகப்படுத்துகின்ற எமது அரசாங்கத்தின் நோக்கத்துடன் இணைந்ததாகக் காணப்படுகின்றது.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, 2015 ஆம் ஆண்டில் நாம் எச்சந்தர்ப்பத்திலும் வெடித்துச் சிதறக் கூடிய குண்டைப் போன்ற பொருளாதாரமொன்றினையே அனந்தரமாகப் பெற்றோம். எவ்வாறாயினும் நாம் வெற்றிகரமாக ஸ்திரத் தன்மையினையும் மீள் சமநிலையினையும் அடைந்துள்ளோம். முன்னைய அரசாங்கமானது படுகடனை மீளச்செலுத்துவதற்கான எவ்வித நியாயமான திட்டமும் இல்லாது செலவு மிக்க வெளிநாட்டுக் கடன்கள் மூலம் வீண்விரயம் மிக்க செலவீனங்களை செய்து கொண்டிருந்தது.

2014 இல் வரி வருமானம் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 10 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் ஏற்றுமதியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14 சதவீதமாக சரிவடைந்து காணப்பட்டது. இது இரண்டு தசாப்த காலத்தில் ஏற்பட்ட பின்னடைவாகும். விசேடமாக 2000 ஆம் ஆண்டில் வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதமாகக் காணப்பட்டதுடன் ஏற்றுமதிகள் 30 சதவீதமாக இருந்தது. இது பொருளாதாரமானதுஸ்திரமற்றநிலையை அடைந்து சிதைவடைந்ததென்பதை காண்பிக்கின்றது.

❖ இந்த அரசாங்கம் பொருளாதார வளர்ச்சியானது தனியார் தொழில் முயற்சிகளினால் வழிப்படுத்தப்படுகின்றது என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளது. இதுவே, முன்னைய நீல மற்றும் பசுமை வரவு-செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா" எண்ணக்கருவாகும். எவ்வாறாயினும், நியாயமான சந்தையே இலங்கையின் வர்த்தக மற்றும் வாணிபத்தின் உயிரோட்டமாகும். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார தொழில் முயற்சிகள் மற்றும் சர்வதேச மட்டத்தில் போட்டியிடக் கூடிய இலங்கை கம்பனிகளின் வளர்ச்சிக்காக தனது புத்திக் கூர்மையினை பயன்படுத்தும் உண்மையான தொழில் முயற்சியாளரையே தனியார் தொழில் முயற்சி என நான் நம்புகின்றேன்.

❖ இதற்கு மாற்றமாக தனியார் துறையில் இன்னுமொரு வகுதியினர் காணப்படுகின்றனர்.

அவர்கள் போட்டித்தன்மை மற்றும் நியாயமான சந்தைகளுக்கு உடன்பாடற்ற ஊழல்களை ஊக்குவிக்கின்ற முன்னைய அரசாங்கத்துடன் தொடர்பு வைத்து தம்மை வளர்த்துக் கொண்டவர்களாவர். இவர்கள் 20 மில்லியன் மக்களின் மீது செலவீனத்தின் சுமையினை ஏற்படுத்தி மக்களின் வரித் தீர்வைகளின் மூலம் தம்மை வளர்த்துக் கொண்டவர்களாவர்.

மேலும் இன்றுவரை நாம் செலுத்திவருகின்ற அதிகரித்த செலவீனங்களை ஏற்படுத்திய பெருமளவு அரசாங்க ஒப்பந்தங்களின் மூலம் நன்மை அடைந்தவர்களாவர்.

இவர்களில் சில சுயநலவாதிகள் தமது கம்பனிகள் மற்றும் தனிப்பட்ட கணக்குகளுக்கு அதி ஷகளவான செல்வத்தினை இறைக்கின்ற சர்வாதிகாரத்தினை நோக்கிச் செல்வதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இக்குழுவினர் தனியார் துறையில் சிறியதொரு வகுதியாயினும் அதிகாரமும் செல்வாக்கும் மிக்கவர்களாவர். பொருளாதார வளர்ச்சியின் இயந்திரமாக நாம் காண வேண்டிய தனியார் துறை இதுவல்ல. ஆனால், இவை கடந்த கால ஆட்சியாளர்கள் விட்டுச்சென்ற எச்சங்களாகும்.

❖ நாம் தனியார் தொழில் முயற்சிகளின் அடிப்படை விதிகளை பின்பற்றுகின்ற சிறந்த சந்தை தொழிற்படுத்தலில் வெற்றியடையக்கூடிய புதிய நிறுவனங்களை உருவாக்குகின்றோம். எமது நாட்டின் அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தலினை தொடர்ந்து பின்னடையச் செய்கின்ற பாதுகாப்புச் சிந்தனைகளிலிருந்து விடுபட்ட தனியார் துறையொன்று இலங்கைக்குத் தேவை. பொருளாதார தாராளமயமாக்கல், பாதுகாப்பு வலையமைப்புக்கான ஆதரவளிப்பு மற்றும் சந்தை நெருக்கடிகளை நீக்குவதற்கான அரச தலையீடு மற்றும் சமூக நீதியினை உறுதிப்படுத்தல் என்பவற்றினை கடந்த வருட வரவு-செலவுத்திட்டத்தில் நான் சமர்ப்பித்தேன்.

இந்த வேலைச்சட்டகத்தினை நாம் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக அதன் பிரதான காரணிகளை வலுப்படுத்துவோம்.

❖ தாராளப் பொருளாதாரத்தினை நோக்கிய எமது தீர்மானங்கள் என்றுமில்லாதவாறு விரைவானதாகும். இதன்முடிவாக துணைத் தீர்வைகளை ஒழிப்பதுடன் வர்த்தக தடைகளை நீக்குவதற்கான ஏற்பாடுகளை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம்.

அதேவேளை, போட்டித்தன்மை சவால்களை எதிர்கொள்வதில் நிறுவனங்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு **(Anti-dumping)** சட்டவாக்கத்திற்கான ஏற்பாடுகள் மற்றும் வர்த்தக மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை உருவாக்கலுடன் பாதுகாப்பான ஏற்பாடுகளை நாம் முன்னெடுப்போம்.

❖ சமூக உட்கட்டமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்பில் நாம் மேலும் முதலீடு செய்யவுள்ளோம். கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கு அதிக நிதி வழங்கும் அதேவேளை அவற்றின் தரம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும். உபாய ரீதியாகவும் வினைத்திறனிலும் வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டுள்ள எமது சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினை மீளெழுச்சி பெறச் செய்வதற்கான நேரம் இதுவாகும். எமது கவனமானது, பயனாளிகளை படிப்படியாக தன்னிறைவு பெற்ற வலுவூட்டப்பட்ட பிரஜைகளாக மாற்றுவதனை நோக்கிச் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

❖ எமது பிரஜைகளை வலுவூட்டுவது எமது அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமாகும். இது அரசியல், சமூக, பொருளாதார வலுவூட்டல் என்பவற்றின் ஊடாக இடம்பெறும்.

"என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா - மக்களை வலுவூட்டல்" என்ற இவ்வருட வரவு- செலவுத்திட்டத் தொனிப்பொருளானது. எமது மக்கள் தாமாகவே முன்னேற்றப் பாதையில் சென்று நாட்டினை வளமடையச் செய்யும் வகையில் அவர்களுக்

# ...த்திட்டம் - 2019

## ...ா – மக்களை வலுவூட்டலும் ...பராமரித்தலும்"


01

கான உதவியை வழங்குகின்ற அதேவேளை, சமூகத்தில் காணப்படும் வறிய மற்றும் பலவீனமான மக்களை நிலைபேறான மற்றும் இலக்கிடப்பட்ட சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினூடாக பாதுகாப்பதுமாகும்.

### "கம்பரெலிய" - "துரிதப் படுத்தப்பட்ட கிராமிய அபி விருத்தி பராமரித்தலும்"

❖ வளர்ச்சி மையங்களாக மாறுவதற்கான ஆற்றல்களைக் கொண்டுள்ள எமது கிராமங்கள் மற்றும் நகரங்களில் இதுவரை வழங்கப்படாத உட்கட்டமைப்பு தேவைகளின் பற்றாக்குறையினை நீக்குவதற்கு 2018 ஜூன் மாதத்தில் கம்பரெலிய நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டமானது "52 நாள் சதி" இனால் பாதிக்கப்பட்ட



வற்றில் முதன்மையானதாகும். சட்டரீதியற்ற அமைச்சரவை அதன் முதலாவது கூட்டத்திலேயே இத்திட்டத்தினை நிறுத்தியது. எவ்வாறாயினும், முக்கியத்துவம் வாய்ந்த இக்கருத்திட்டமானது இவ்வருடத்தின் ஜனவரி மாதத்தில் எமது அரசாங்கத்தினால் மீளெழுச்சி பெறச் செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் தேர்தல் தொகுதியொன்றுக்கான ஒதுக்கீடானது 200 மில்லியன் ரூபாவிலிருந்து 300 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இதற்காக ரூபா 48,000 மில்லியன் 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விடயப் பரப்பானது மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக வழிபாட்டுத்தலங்களுக்கான ஒதுக்கீடானது ரூபா 500,000 இலிருந்து ரூபா 1 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (உதாரணக் குறிப்பு III (அ) - 10)

### "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா" முன்னேற்றத்தை நோக்கி

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, "என்டர்பிறைஸ் ஸ்ரீ லங்கா" கடன் திட்டத்தினை 2018 இல் நாடு முழுவதிலும் நாம் ஆரம்பித்துள்ளோம். இதன் மூலம் குறிப்பாக எமது இளைஞர்களுக்கு மத்தியில் தொழில் முயற்சியாண்மையுடைய சமூகமொன்றினை உருவாக்கும் நோக்கில், வங்கிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் அடிப்படையில் சலுகை வட்டி வீதத்தில் கடன்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படுவதுடன் நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளினூடாக ஊக்குவிக்கப்படும்.

தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் சான்றிதழ் பெற்றவர்களுக்கு "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா" கடன் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த சில மாதங்களில் "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா" கடன் திட்டத்திலிருந்து 30,000 இற்கு அதிகமான தொழில் முயற்சியாளர்கள் பயன்பெற்றுள்ளதுடன், இதற்காக ரூபா 60,000 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

இக் கடன் திட்டங்கள் அனைத்தினதும் முழுமையான விபரங்கள் அடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (விளக்கக் குறிப்பு III (அ)

❖ எவ்வாறாயினும், "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் கடன்களுக்கான வட்டியின் குறிப்பிடத்தக்களவு பகுதியினை அரசாங்கம் பொறுப்பேற்கின்ற போதும் சிறியளவு தொழில் முயற்சியாளர்கள் வங்கிகளினால் கோரப்படுகின்ற பிணைகளை வழங்குவதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வகையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உத்தரவாதங்களை வழங்குவதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் கீழ் நிதியமொன்றினைத் தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

❖ வங்கி அலுவலர்கள், புதிய தொழில் முயற்சியாளர்களை அதைரியப்படுத்துவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, அவ்வாறான முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு "1925" என்ற தொலைபேசி அழைப்பு நிலையமொன்றினை ஆரம்பித்துள்ளோம்.

❖ நிதிச் செலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கு மேலதிகமாக, "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித்திட்டம் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் வியாபார முகாமைத்துவத்தில் சந்தைகளுடன் தொழில் முயற்சிகளையும் சிறிய வியாபாரங்களையும் இணைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும். "என்டர்பிறைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் வாடிக்கையாளர்களுக்கு குறித்த துறைகளில் ஆற்றலினை விருத்திசெய்து கொள்வதற்காக பாரிய தனியார் துறை கம்பனிகளுடனும் கைத்தொழில் பயிற்சி நிறுவகம், தகவல்தொடர்பாடல்தொழில்நுட்ப முகவராண்மை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை போன்ற அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

"என்டர்பிறைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித்திட்டமானது தொழில் முயற்சிகள் மற்றும் சிறிய வியாபாரங்கள் விருத்தியடைவதற்கு சாத்தியமான சூழலினை உருவாக்கும் வகையில் மாற்றமடையும்.

❖ சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மற்றும் சிறிய வியாபாரங்களின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பதற்கான மேலதிக நடவடிக்கையாக அரசாங்கத்தின் பெறுகைகளை சிறிய மற்றும்நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு வழங்குவது அவசியமாகும். அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கொள்வனவுப் பெறுமதியில் ஆகக் குறைந்தது 10 சதவீதத்தினை இலங்கை சிறிய மற்றும்நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்கு மேலதிக மாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான ஊக்குவிப்பாக சிறிய ட்ரக் ரக வாகனங்களுக்கான உற்பத்தித் தீர்வை குறைக்கப்படுவதோடு, வாகனப் பெறுமதியில் பெற்றுக் கொடுக்கப்படும் கடனுக்கான விகிதம் அதிகரிக்கப்படும்.

### வாழ்வாதார அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினூடாக வளர்ச்சி

❖ கௌரவ சபாநாய கர் அவர்களே, விவசாயம், கடற்றொழில் மற்றும் பெருந்தோட்டத்துறையின் செயலாற்றுகையானது நவீன தொழில்நுட்ப உள்ளீடுகள் மற்றும் முறைமை மாற்றத்தினூடாக அவற்றினது உற்பத்தித் திறனை அதிகரித்துள்ளதுடன், இது உயர் விளைச்சல் மற்றும் தரமான உற்பத்திக்கு வழிகோலியது.

❖ விவசாயத்துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் மூலம் தற்பொழுது தாபிக்கப்பட்டுள்ள விவ சாய தொழில்நுட்ப செயன் முறைப் பூங்காக்களின் வெற்றியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப உள்ளீடு மற்றும் உயர் பெறுமதிமிக்க பயிர்களின் அபிவிருத்திக்கான விவசாய வியாபார பெறுமதிச் சங்கிலிகளுடன் விவசாயிகளை இணைப்பதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

இந்நிகழ்ச்சித் திட்டமானது அம்பாந்தோட்டை, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

❖ விவசாயத்துறையில் காணப்படும் பிரதான தேவையாக அறுவடையின் பின்னரான இழப்புகளைக் குறைப்பதற்கு அவசியமான சிறந்த களஞ்சியப்படுத்தல் மற்றும் களஞ்சியசாலை வசதிகள் காணப்படுகின்றன. தம்புள்ளையில் அமைக்கப்பட்டிருக்கும் அவ்வாறான களஞ்சியசாலையின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் அரசாங்கம் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சீதோஷ்ண நிலைக் கட்டுப்பாட்டுவசதியினைக்கொண்ட களஞ்சியசாலைகள் கட்டுநாயக்க, எம்பிலிப்பிட்டிய, யாழ்ப்பாணம் மற்றும் கெப்பெட்டிப்பொல ஆகிய இடங்களில் நிறுவப்படவுள்ளது.

❖ "திரிசவிய" கடன் திட்டம் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு கோழி வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் விநியோக வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கு வசதியளிக்கப்படும்.

அத்துடன் சிறியளவிலான கால்நடை தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொடர்பான சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டள்ளவர்களுக்கும் உதவிகள் விரிவுபடுத்தப்படும்.

❖ பெறுமதி சேர்க்கப்பட்ட இறப்பர் அடிப்படை வாகன டயர் உற்பத்தி போன்ற கைத்தொழில்களில் செயற்கை இறப்பர் தட்டுப்பாடு ஒரு முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது. இதனால் இறப்பர் மீள்நடுகை மற்றும் புதிய இறப்பர் மரக் கன்றுகளை நடுதல் என்பவற்றுக்காக நாம் நிதியுதவியினை இரட்டிப்பாக்கியுள்ளோம். இதற்காக ரூபா 800 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ தற்போது உள்ளூர் வாகன டயர் தயாரிப்பாளர்களின் உற்பத்திகளை தரப்படுத்தல் மற்றும் பரிசோதனை செய்வதற்கு நாட்டில் உரிய வசதிகள் காணப்படுவதில்லை.

ஆகவே, நவீன வசதிகளைக் கொண்ட ஆய்வுகூட வசதிகள் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் தனியார் துறையின் பங்களிப்புடன் உருவாக்கப்படும்.

❖ தெங்குப் பொருள் உற்பத்திக் கைத்தொழில் பெறுமதி சேர்க்கைக்கு பெறுமளவிலான சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எவ்வாறாயினும், நாட்டில் இத்தொழிற்றுறையின் ஒழுங்குபடுத்தல் வேலைச் சட்டகமானது இத்துறையில் தொழில் முயற்சியாளர்கள் முதலீடுகளை மேற்கொள்வதற்குத் தடையாகவுள்ளது. இதன் காரணமாக தற்போது நடைமுறையிலுள்ள உலர்த்திய தேங்காய்த் துருவல் பதப்படுத்தல் முறைமை, தேங்காய்நொறுக்கிகள், சிரட்டைக் கரி என்பவற்றுக்கான பதப்படுத்தல் முறைமைகளிற்கான அனுமதிப்பத்திர செயன் முறையை இலகுபடுத்தக் கூடிய வகையில் தற்போதுள்ள நடைமுறைகள் மீளாய்விற்குட்படுத்தப்படும்.

❖ களிமண், மூலப் பொருளகழ்வு மற்றும் இடத்துக்கிடம் எடுத்துச் செல்லல் போன்ற செயற்பாடுகளின் போது மட்பாண்டக் கைத்தொழிலும் மேற்போந்த பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்கின்றது.

ஆகவே தேவையான சூழல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அதேவேளை தற்போதுள்ள ஒழுங்குமுறைகள் மீளாய்வு செய்யப்பட்டு இத்தொழிற்றுறை மேம்படுத்தப்படும்.

❖ உலகச் சிறப்புமிக்க இலங்கை கறுவா உற்பத்தி பல்வேறுபட்ட பிரச்சினைகளை முகங்கொடுக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், உலகச் சந்தையில் அதன் ஒப்பீட்டு அனுகூலத்தினை தக்க வைத்துக்கொண்டுள்ளது.

ஆகவே, அனைத்துக் கறுவா ஏற்றுமதியாளர்களும் ஏற்றுமதியின் போது தரக் கட்டுப்பாட்டு பரிசோதனைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.


இருந்த போதிலும் பரிசோதனையின் போது தேர்ச்சி பெறாத ஏற்றுமதியாளர்கள் 12 மாதங்களுக்குள் தமது செயற்பாடுகளை சீர்செய்து கொள்வதற்குத் தேவையான 'உதவிகள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் அமுல்படுத்தப்படும் ஏற்றுமதிச் சந்தை நுழைவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக வசதியளிக்கப்படுவர்.

❖ பலப்பிட்டி - கொஸ்கொடையில் அமைந்துள்ள கறுவா பயிற்சி நிலையம் கறுவாப் பட்டை உரிப்பவர்களின் தட்டுப்பாட்டினை நீக்கும் வகையில் அதன் முழுமையான செயற்பாடுகளை மேம்படுத்தும்.

(தொடரும்)

# தமிழினத்தின் சாபக்கேட்டை யாரிடம் முறையிடுவது ஆண்டவா!

## ஆனந்தசங்கரி ஆதங்கம்



(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வரம் தேவாரம் பாடப்பட்ட திருத்தலம் மட்டுமல்ல, பஞ்ச ஈஸ்வரங்களிலும் ஒன்றாகும். இக் கோவில் முதன் முதலாக போர்த்துக்கீசரால் தான் உடைக்கப்பட்டது. இவ்வாறான சரித்திரம் தெரியாதவர்களின் கைகளில்தான் நமது நாடும், இனமும் சிக்கத் தவித்து சீரழிந்து கொண்டிருக்கின்றது.

ஒரு சரித்திரப் பிரசித்திபெற்ற ஒரு கோவிலில், அதுவும் சிவராத்திரி தின ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில், எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத இந்த செயலை செய்தவர்கள் நிச்சயமாக இறை நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க முடியாது.

ஏற்கனவே ஒற்றுமை இல்லாமல் பல அழிவுகளை சந்தித்த தமிழ் மக்களிடையே மத ரீதியான உணர்வுகளையும் தூண்டி, எமது மக்களை சீரழிக்கும் இவ்வாறான செயற்பாடுகளை தமிழர் விடுதலைக் கூட்டணி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. இச் செயற்பாட்டை எந்த வகையாலும் நியாயப்படுத்த முடியாது.

காணொலியில் மிகத் தெளிவாக, பலர் பார்த்துக் கொண்டிருக்க பெண்கள்கூட மிக ஆவேசத்துடன் செயற்பட்டு கம்பிகளை அகற்றுவதைப் பார்க்கும் போது தமிழினத்தின் சாபக்கேட்டை யாரிடம் முறையிடுவது, ஆண்டவா! இவர்கள் அறியாமல் செய்வதை மன்னித்துக்கொள்ளும் என்று அவரிடமே முறையிடுவதைத் தவிர வேறுவழி தெரியவில்லை.

வருடாவருடம் நடைபெறும் மடுமாதா திருவிழாவிற்கு, இந்துக்கள் இறை நம்பிக்கையுடன் மிக அதிகளவாக கலந்து கொள்கின்றார்கள் என்பதை இந்த வளைவை இடித்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு தான் மதங்களுக்கிடையே முரண்பாடுகளை தோற்றுவித்து, ஒருசிலர் குளிர்காய நினைக்கின்றார்கள். இதனை தமிழ் மக்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என அனைத்து தரப்பினரையும் தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுக் கொள்கின்றது என அதன் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# எம் மத்தியில் சமய குரோதங்கள் வளரவிடாது நல்லெண்ணத்துடன் வாழ முற்பட வேண்டும்



## யாழ்.மாநகர முதல்வர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

அன்பையும் சமாதானத்தையும் போதித்த இயேசு பிரான் மற்றும் ஏனைய சமய நற்போதனைகளைப் பின்பற்றி வாழ்பவர்களில் நானும் ஒருவன் என்ற ரீதியில் மன்னாரில் ஏற்பட்ட துரதிர்ஷ்ட சம்பவத்தை கேள்விப்பட்டதால் பெரும் அதிர்ச்சியடைந்தேன். பொறுப்பற்ற முறையில் வேறு இடங்களில் இருந்து வந்த கத்தோலிக்க மக்களாலும் மற்றும் அந்த இடத்தைச் சேர்ந்த ஒரு சிலராலும் திருக்கேதீஸ்வரம் கோவிலுக்குச் செல்லும் வீதியில் அமைந்த வாயில் வளைவை அநாகரிகமான முறையில் இடித்து அழித்துள்ளார்கள். இந்த பாரதூரமான பழிச் செயலை சமாதானத்தையும் தர்ம காரியங்களையும் விரும்பும் எவரும் விரும்பமாட்டார்கள். இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மன்னாரில் மதப் பதற்றம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என பத்திரிகைகள் எடுத்தியம்புகின்றன. இதை நாம் தவிர்த்தாக வேண்டும். மதப் பிரிவினையூடாக ஏனைய விடயங்களை உட்புகுத்த முயலலாம். மதப் பிரிவினையூடாக இனத்தினைத் துண்டாடி எமது எதிர்கால அரசியல் அபிலாசைகளை மலினப்படுத்தலாம். எனவே நீண்ட காலமாக பிரச்சினைக்குரிய இந்த வளைவு தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைவரும் ஒன்றுகூடி இதை ஒட்டிய நன்முடிவை அடைய வேண்டும். இப்பேற்பட்ட அடாவடித்தனம் எதிர்காலத்தில் ஏற்படாவண்ணம் இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் நல்லதோர் முடிவை எய்த வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

எம் மத்தியில் சமய பேதம், சமய குரோதங்கள் வளரவிடாது நல்லெண்ணத்தை தோற்றுவித்து வாழ முற்பட வேண்டும்.

கடந்த காலங்களில் இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட எம் மத்தியில் மதக் கலவரம் தோன்றா திருக்க அனைவரும் ஒன்று பட்டு எவருக்கும் பாதிப்பில் லாத உரிய தீர்வை அடை வோம் என்று கூறி எம் அனைவருக்கும் உரிய இறை ஆசி வந்தாக வேண்டும் என வேண்டி நிற்கின்றேன்.

மத பேதம் அற்ற இனமாக நாம் வாழப் பழக வேண்டும். இதுவே எமது நோக்காக அமைய வேண்டும்.

நடந்தவை நடந்தவையாகட்டும். இனி நடப்பவை நல்லதாகட்டும் என ஆண்டவரின் நல்லாசியை வேண்டி நிற்கின்றேன் என்று யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்துள்ளார். (இ-9)

# "மதங்களின் புனிதத்தைக் காப்போம்"

(யாழ்ப்பாணம்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு அமைக்கப்பட்ட வளைவை அடித்து நொருக்கியும் கட்டப்பட்ட நந்திக்கொடியையும் அறுத்து ஏற்படுத்தப்பட்ட மத நிந்தனை நிகழ்வுகளை வன்னி பெருநிலப்பரப்பு சைவக் குருமார் ஒன்றியம் மற்றும் சைவ பெருமக்களும் மிகவும் மனவருத்தத்துடன் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறான செயற்பாடு எம் மதத்தை அழிக்கும் செயற்பாடல்ல. தாங்களே தம் மதத்தை இழிவுபடுத்தும் ஒரு நிகழ்வாகவே சித்திரிக்கப்படுகின்றது.

தமது மதத்தின் புனிதத்தையும் ஆழத்தையும் புரியாதவர்கள் இந்து மதத்தை அழிப்பதென்ற நோக்கில் தம் செயற்பாடுகளை முன்னெடுத்து தங்கள் மதத்தின் புனிதத்தையே களங்கப்படுத்திக் கொள்கிறார்கள். இச் செயற்பாடு எமக்கு இழைத்த அநீதியாகும்.

இவ்வாறான செயற்பாடு தொடராதிருக்க இந்து மக்களாகிய அனைவரும் கண்டிக்கின்றோம். தங்களது மத அனுஷ்டான நடவடிக்கைகளுக்கு மாற்று சமயத்தவர்களால் இடையூறு விளைவித்திருந்தால் உங்களுடைய மனநிலை எவ்வாறிருக்குமோ? அதே உணர்வுதான் எமக்கும் இருக்கின்றது என்பதனை நீங்கள் எப்போதும் மனதிருத்த வேண்டும் என்பதை தங்களுக்கு வலியுறுத்தி, எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையோடு நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் எல்லோரும் ஒற்றுமையாக இன, மத, சமூக நல்லிணக்கத்தோடு நம் வாழ்வில் சர்வ மதங்களுக்கும் நல் மதிப்பளித்து புனிதத்தைக் காப்போம் என அந்த அமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர். (இ-9)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விருந்தினருக்கு வேண்டிய குறிப்புக்கள்

ஒருத்தர் அவசர அவசரமாக வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார்.

என்ன விடயம் என்று விசாரித்தார் இன்னொருத்தர். சொந்தக்காரர் ஒருத்தர் ஊரிலேயிருந்து வருவதாக லெட்டர் போட்டிருக்கின்றார். அதுதான் என்று இழுத்தார் இவர். ரயில் ஸ்டேஷனுக்குப் போய் அழைத்துக் கொண்டு வரப்போகின்றீர்களா? என்று கேட்டார் அவர். "அதெல்லாம் ஒன்றுமில்லை சேர்! அவர் வருவதற்குள்ளே எங்கேயாவது தலை மறைவாக போயிடலாம் என்று கிளம்பிக் கொண்டிருக்கின்றேன்!" என்றார் இவர்.

விருந்தினர் வருகின்றார்கள் என்றாலே வீட்டிலே இருக்கின்றவர்கள் வெளியிலே புறப்படலாமா? என்று யோசிக்கின்ற காலம் இது! சொந்தக்காரர்களிலே இருக்கிற வெறுப்புத்தான் இதுக்குக்காரணம் என்று சொல்லிவிட முடியாது! பரபரப்பான வாழ்க்கை–விலைவாசி உயர்வு– வீட்டிலே இடவசதி பற்றாக்குறை–இதெல்லாம் இதுக்குக்காரணம் அதனால்...இப்ப ஒரு வீட்டிற்கு விருந்தினராக போகவேண்டும் என்கின்ற அபிப்பிராயம் உங்களுக்கு இருந்தால்...நீங்கள் நுணுக்கமாக தெரிந்து வைத்திருக்க வேண்டிய சில குறிப்புக்கள் இருக்கின்றன. பலபேருடைய அனுபவங்களிலிருந்து சேகரித்த தகவல் மிகவும் உபயோகமாக இருக்கும். கேட்டு வைத்திருக்கின்றீர்களா? அதாவது ஒரு நல்ல விருந்தினராக நடந்து கொள்வது எப்படி?

விருந்தினர்களை உபசரிக்கிறது எப்படி என்பதை பற்றி நிறையப்பேர் சொல்லியிருக்கின்றார்கள். திருவள்ளுவரே சொல்லியிருக்கின்றார். அதனாலே அதைப்பற்றி நமக்கு வேண்டாம். உபசரிப்பு "நல்லா இருக்க வேண்டும் என்றால் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?" அதுதான் இப்பொழுது நமக்கு தேவை!

நீங்கள் யார் வீட்டிற்குப் போனாலும் போவதற்கு முன் ஒரு கடிதம் போட்டுவிடுங்கள் சேர்! எத்தனைபேர் போகின்றீர்கள், எவ்வளவு நாள் தங்கப் போகின்றீர்கள் என்பதையும் எழுதிவிடுங்கள்! நீங்கள் தங்கப் போகின்ற உறவினர் வீட்டிற்கு உங்களுக்கு வேண்டப்பட்ட நண்பர்களையும் கூட்டிக்கொண்டு போகாதீர்கள்!

உங்கள் வீட்டிற்கு வந்து இத்தனை நாள் தங்கலாம் என்று இருக்கின்றேன். வரலாமா? என்று எழுதிக் கேளுங்கள்! பெரும்பாலும் உங்களுக்கு ஆதரவாகத்தான் பதில் வரும்.

நீங்கள் வருகின்ற சமயத்திலே நான் அலுவலகத்தில் வேலையாக வெளியூருக்கு போக வேண்டியிருக்கும் என்று பதில் வந்தால் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் போக வேண்டாம். வரவே வேண்டாம் என்று பதில் எழுதி விட்டார்கள் என்றால் நீங்கள் எப்பவுமே அவர்கள் வீட்டுப் பக்கம் தலைவைத்துப் படுக்க வேண்டாம்! அதுதான் மரியாதை!

வாங்க என்று சொல்லி பதில் வந்துவிட்டது என்று வையுங்கள்! உடனே அடுத்த கடிதத்திலே நீங்கள் எப்பொழுது வரப்போகின்றீர்கள்– ரயிலா, பேருந்தா என்ற விபரத்தை எழுதிடுங்கள். நீங்கள் போகின்றபோது வெறுங்கையை வீசிக்கொண்டு போகாதீர்கள். உங்கள் ஊரில் என்ன விசேடமோ அது மாதிரியான தின்பண்டம், பழம் ஏதாவது வாங்கிக் கொண்டு போங்கள். சென்னையில் இருந்து திருநெல்வேலிக்குப் போகின்றீர்கள்.

என்ன வாங்கிக்கிட்டு வந்திருக்கின்றீர்கள் என்று கேட்டால் திருநெல்வேலி அல்வா என்று சொல்லாதீர்கள்... அது தான் அங்கேயே கிடைக்குமாமே! அதுக்கு என்னத்திற்கு நீங்கள்?

உங்களுக்கு வேண்டிய சோப்பு–சீப்பு–துண்டு –டிரஸ் சமாச்சாரம் எல்லாம் கையோட எடுத்துக் கொண்டு போய்விடுங்கள். அங்கே போய் சேவிங் செட் இருந்தால் குடுங்கள் என்று கேட்டுக் கொண்டு நிற்காதீர்கள்!

போகின்ற இடத்தில் சுமுகமாக பழகுங்க. அவர்களுக்குத் தகுந்த மாதிரி அட்ஜஸ்ட் செய்து கொள்ளுங்கள்! அவர்கள் சாப்பிடுகின்ற நேரம் நீங்களும் சாப்பிடுங்கள். அவர்கள் தூங்குகின்ற நேரம் நீங்களும் தூங்குங்கள். அவர்கள் தூங்கிய பிறகு எழுப்பி சாப்பாடு போடு என்று சொன்னால் நன்றாக இருக்குமா?

இன்னொரு தலையனை இருக்குமான்னு எல்லாம் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள். ஏனென்றால் எல்லா வீட்டிலேயும் அது எல்லாம் தாராளமாக இருக்காது!

உங்கள் துணி மணிகளை நீங்களே சுத்தம் செய்யுங்கள். அவர்கள் வீட்டு வேலைக்காரர்களிடம் கொடுக்காதீர்கள். அவர்கள் வீட்டுச் சாப்பாட்டையும் சாப்பிட்டு விட்டு அதிலே குற்றமும் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

நல்லா இருந்தா நல்லா இருக்கின்றது என்று சொல்லுங்கள். நீங்கள் உங்கள் குழந்தை குட்டிங்களோட ஊர்சுத்திப் பார்க்க கிளம்பினா அவர்கள் வீட்டுப் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு போங்கள் நீங்கள் பெண்ணாக இருந்தா அவர்கள் வீட்டு பொம்பிளைப் பிள்ளைகளுக்கு சடை பின்னிவிடுங்கள்.

விருந்தாளியாக ஒரு வீட்டுக்குப் போயிருக்கின்ற பொழுது அந்த வீட்டிலே கடன் கேட்டுக் கொண்டே நிற்காதீர்கள். அது நன்றாக இருக்காது!

அவர்கள் வீட்டு மெத்தை–சோபா டி.வி இது மேலே எல்லாம் உங்கள் குழந்தைகள் ஏறி–இறங்கி குதித்துக் கொண்டிருந்தார்கள். அதுவும் சரியா இருக்காது! போறதுக்கு முன்னாடி உங்கள் பிள்ளைகளிடம் சொல்லி வையுங்கள்.

இப்படி சில நுணுக்கமான விடயங்களை கவனத்திலே வைத்துக் கொண்டால் உங்களுக்கும் நல்லது. அவர்களுக்கும் நல்லது.

இவ்வளவு அறிவுரையையும் கேட்டுவிட்டு ஒருத்தர் இன்னொருத்தர் வீட்டிற்கு விருந்தாளியாக போனார். ஒரு வாரம் தங்கியிருந்தார். திரும்பி வந்தார். வந்தவுடனே அவரைப் பார்த்து " எப்படி இருந்தது " என்று கேட்டேன்.


நீங்கள் சொன்ன மாதிரியே நடந்து கொண்டேன். நன்றாக இருந்தது. இருந்தாலும் திரும்பி வருகின்ற பொழுது செருப்பை தேடித் தேடி பார்த்து அலுத்துப் போயிட்டேன் என்றார்.


பிறகு என்ன செய்தீர்கள் என்று கேட்டேன்.

என்னுடைய செருப்பை போட்டுக் கொண்டு வந்துவிட்டேன்.. என்றார் இவரை என்ன சேர் செய்யலாம்?

# பிரதமர் மோடி, இந்திய இராணுவம், இந்து மதம் பற்றிய வெறுப்புக்கருத்துக்களை கூறிய அமைச்சர் நீக்கம்

## பாக். பிரதமர் இம்ரான் அதிரடி





(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் ஆளும் பி.டி.ஐ.கட்சியின் பஞ்சாப் மாகாண தகவல் மற்றும் பண்பாட்டு அமைச்சர் பயா சுல் ஹசன் சோஹான் இந்து மதம், பிரதமர் மோடி மற்றும் இந்திய இராணுவம் பற்றிய வெறுப்புணர்வைத் தூண்டும் கருத்துக்களைக் கூறிய தற்காக அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி இம்ரான் கான் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டார்.

இவரது கருத்துக்களை மிகவும் பொறுப்புடன் அணுகிய இம்ரான் கான் பஞ்சாப் முதல்வர் உஸ்மான் புஸ்தாருக்கு அறிவுறுத்தி பயாசுல் ஹசன் சோஹானை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கச் செய்தார்.

இது தொடர்பாக பி.டி.ஐ. கட்சி தன் டுவிட்டரில், "இன்னொருவர் நம்பிக்கையை புண்படுத்துவது எந்தவொரு கதையாடலின் அங்கமும் கிடையாது. சகிப்புத்தன்மை என்ற அடிக்கட்டுமானத்தின் மேல்தான் பாகிஸ்தான் என்ற நாடு கட்டமைக்கப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.

முதல்வர் புஸ்தார், பயாசுல் சோஹான் மன்னிப்பை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால் பிரதமர் இம்ரான் உடனடியாக அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும் பி.டி.ஐ. கட்சியின் மூத்த உறுப்பினர்கள், மனித உரிமை அமைச்சர்கள் பயாசுல் பேச்சுக்கு கடும் கண்டனங்களை எழுப்பியதும் குறிப்பிடத்தக்கது.

பயாசுல்ஹசன்சோஹான் தெரிவிக்கையில்,

"நான் பிரதமர் மோடியையும் இந்திய இராணுவத்தையும்தான் விமர்சித்தேன், இந்துக்களை அல்ல. இந்து சமூகத்தினரை அது புண்படுத்தியிருந்தால் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன், என் கருத்து பாகிஸ்தான் வாழ் இந்து மக்களுக்கு எதிரானது அல்ல" என விளக்கமளித்துள்ளார். (இ-7)

### தங்கச் சுரங்கம் சரிவு

# பலி எண்ணிக்கை 17 ஆக அதிகரிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில்தங்க சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது.

இந்தோனேசியாவின் சுலாவேசிமாகாணம்போலாங் மோங்கோண்டவ் நகரில் தங்க சுரங்கம் செயற்பட்டு வந்தது. முறையான உரிமம் பெறாமல்சட்டவிரோதமாக செயற்பட்டு வந்த இந்த சுரங்கத்தில், கடந்த மாதம் 26ஆம் திகதி தங்கத்தை வெட்டி எடுக்கும் பணியில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் அங்கு பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சுரங்கத்தில் இருந்த தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர். இதில் 3 பேர் பலியானதாகவும், 13 பேரை பத்திரமாக மீட்கப்பட்டதாகவும் முதல் கட்ட தகவல் வெளியானது. தகவலறிந்து வந்த மீட்பு குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், இந்த தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது என மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். மேலும், அங்கு சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது எனவும் தெரிவித்தனர். (இ-7)

### நெருக்கடிக்கு பணிந்தது பாகிஸ்தான்

# மசூத் அசார் சகோதரர் உட்பட 44 பயங்கரவாதிகள் கைது!



(இஸ்லாமாபாத்)

ஜெய்ஷ்-இ-முஹம்மத் பயங்கரவாத அமைப்பின் தலைவன் மசூத் அசாரின் சகோதரர் உட்பட தடைசெய்யப்பட்ட இயக்கங்களை சேர்ந்த 44 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் புல்வாமா மாவட்டத்தில் 14-2-2014 அன்று ஜெய்ஷ்-இ-முஹம்மத் பயங்கரவாத இயக்கத்தின் ஆதரவுபெற்ற பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலை தொடர்ந்து இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் நிலவுகிறது.

பயங்கரவாத அமைப்புகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாகிஸ்தானுக்கு இந்தியா மற்றும் சர்வதேச நாடுகள் நெருக்கடி கொடுத்து வருகின்றன.

பாகிஸ்தானிலுள்ள பயங்கரவாத அமைப்புகள் மீதும், அதன் தலைவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க ஐ.நா. பாதுகாப்பு சபையில் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதைதொடர்ந்து, ஜமாத்-உத்-தவா பயங்க்ரவாத இயக்கம் மற்றும் பலாக்-ஐ-இன்சானியட் அறக்கட்டளை ஆகிய 2 அமைப்புகளுக்கு பாகிஸ்தான் அரசு அண்மையில் தடை விதித்துள்ளது. இந்த அமைப்புகளின் வங்கி கணக்குகளும், அசையாச் சொத்துக்களும் முடக்கப்பட்டுள் ளன.

ஜமாத்- உத்தவா அமைப்பை லஷ்கர்-இ- தொய்பா பயங்கரவாத அமைப்பின் தலைவன் ஹபீஸ் சயீத் நடத்துகிறான். இவன் மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவன். இவன் தலைக்கு அமெரிக்கா ரூ.7 கோடி பரிசு தொகை அறிவித்துள்ளது. விசாரணைக்கு தங்களிடம் ஒப்படைக்கும்படி இந்தியா வலியுறுத்தி வருகிறது. ஆனால் அவன் பாகிஸ்தானில் இல்லை என அந்நாட்டு அரசு மறுத்து வருகிறது.

ஜமாத்-உத்-தவா மற்றும் அதன் அறக்கட்டளையான பலாக்-ஐ- இன்சானியட்டை ஐ.நா. பாதுகாப்பு சபையில் கடந்த 2005ஆம் ஆண்டு தடை செய்யப்பட்ட பட்டியலில் அறிவித்தது.

ஆனால் பாகிஸ்தான் அதை கண்காணிப்பு பட்டியலில் வைத்திருப்பதாகவும் தடை பட்டியலில் இல்லை என்றும் அறிவித்தது.


லஷ்கர்-இ- தொய்பா மற்றும் மசூத் அசாரின் ஜெய்ஷ்-இ-முகமது உள்ளிட்ட 68 பயங்கரவாத அமைப்புகள் பாகிஸ்தானின் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு ஆணையத்தின் கண்காணிப்பு பட்டியலில் வைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அரசு குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில், புல்வாமா தாக்குதலுக்கு பொறுப்பேற்ற ஜெய்ஷ்-இ-முஹம்மத் பயங்கரவாத அமைப்பின் தலைவன் மசூத் அசாரின் சகோதரர் முப்தி அப்துர் ரவூப் மற்றும் ஹம்மாத் அசார் உட்பட தடைசெய்யப்பட்ட இயக்கங்களை சேர்ந்த 44 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தான் ஊடகம் நேற்று தெரிவித்துள்ளது.

இந்த தகவலை பாகிஸ்தான் ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் ஷெஹ்ர்யார் அஃப்ரி உறுதிப்படுத்தியுள்ளார். பயங்கரவாத இயக்கங்களை முடக்கும் நாடு தழுவிய அதிரடி நடவடிக்கையில் இவர்கள் கைதாகியுள்ளனர்.

மேலும் சில நாட்களுக்கு இந்த நடவடிக்கை தொடரும் என்பதால் இன்னும் பலர் கைதாக வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வடகொரியா ஏவுகணை ஏவுதளத்தை மீண்டும் புனரமைப்பதாக தகவல்




(பியாங்யாங்)

வட கொரியா ஏவுகணை ஏவுதளத்தை மீண்டும் புனரமைப்பு செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. புதிய செய்மதி ஒளிப்படங்களின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க மற்றும் வட கொரிய தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்று இரு நாட்களின் பின்னர் இந்த செய்மதிப் ஒளிப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

செய்மதி நிறுவல்கள் மற்றும் இயந்திர ஆய்வுகளுக்காகப் பயன்படுத்தப்படும் வட கொரியாவின் 'டோங்சாங்ரி தளத்திலேயே ஏவுகணை ஏவுதளம் புனரமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.


எனினும், இந்தத் தளம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைகளுக்கு பயன்படுத்தப்படுவதில்லை எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, அமெரிக்க மற்றும் வட கொரிய தலைவர்களுக்கு இடையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற இரண்டாவது பேச்சுவார்த்தை இணக்கப்பாடின்றி நிறைவுபெற்றது.

அணுவாயுதத்தை முழுமையாக கைவிட வட கொரியா ஒப்புக்கொள்ளுமா என்பதே பேச்சுவார்த்தையின் முக்கிய விடயமாக அமைந்திருந்த நிலையில், எந்த இணக்கப்பாடும் இன்றி குறித்த பேச்சுவார்த்தை நிறைவு பெற்றிருந்தமைக் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெறிகொண்ட சிறுபான்மை எதிர்க்கட்சியை துடைத்தெறிவோம்

## ஜனாதிபதி மதுரோ உறுதி



(கராகஸ்)

தன்னை பதவி நீக்க வேண்டும் என்ற முனைப்புடன் செயற்படும் வெறிகொண்ட சிறுபான்மை எதிர்க்கட்சியை தோற்கடிக்க வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ உறுதிகொண்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஹுகோ சாவேஸின் நினைவு தின நிகழ்வில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "வெறிப்பிடித்த சிறுபான்மையினரின் வெறுப்பு தொடரட்டும். அது அவர்களது பிரச்சினை. நாம் அதனை பொருட்படுத்த போவதில்லை. அவர்களது பாதையிலேயே நாம் அவர்களை தடுத்து நிறுத்துவோம். அவர்களை தோற்கடிப் போம். நாட்டின் சிறந்த எதிர்காலத்திற்காக நாம் அதனை நிறைவேற்றுவோம்.

அமெரிக்காவின் உதவியுடன் எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் ஆட்சி கவிழ்ப்பு முயற்சியை தோற்கடிப்போம்" எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மதுரோ பதவி விலக வேண்டும் என வலியுறுத்திவரும் எதிர்க்கட்சி தலைவர் ஜுவான் கெய்டோ, தன்னை இடைக்கால ஜனாதிபதியாக அறிவித்தார்.

அவரது இந்த அறிவிப்பிற்கிணங்க அமெரிக்கா உள்ளிட்ட பல சர்வதேச நாடுகள் அவரை இடைக்கால ஜனாதிபதியாக அங்கீகரித்து ஆதரவு வழங்கி வருகின்றன.

இந்நிலையில், மதுரோவின் பதவி விலகலை வலியுறுத்தி வெனிசுவெலா மீது மேலும் பொருளாதார தடைகளை விதிக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### பொய்க்குற்றச்சாட்டு

# 16 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆறு மரணதண்டனை கைதிகள் விடுதலை

(டில்லி)

தமது வாழ்நாளில் 16 ஆண்டுகள் சிறையில் கழித்த 6 மரணதண்டனை கைதிகளை இந்திய உயர்நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கொலை மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்குகளின் கீழ் கைதுசெய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட பழங்குடியினரே இவ்வாறு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஆறு பேரும் கடந்த 2003ஆம்ஆண்டு மஹாராஸ்ரா மாநிலத்தின் நாச்சிகல் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரை கொலைசெய்ததாகவும், ஒரு பெண்ணை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியதாகவும் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை 10 ஆண்டுகளின் பின்னர் நேற்று முன்தினம் மீண்டும் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின்போது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் அல்லர் என நிரூபிக்கப்பட்ட நிலையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதுடன், பொய் குற்றச்சாட்டுகளை சுமத்தி 16 ஆண்டுகள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டமைக்காக மஹாராஷ்ரா அரசு 5 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க நான் தயார்!

## ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்தால் ஜனாதிபதி வேட்பாளராக மீண்டும் களமிறங்கத் தயார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.



ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளர் விடயம் தொடர்பாக கட்சி மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வருடத்திற்குள் பெரும்பாலும் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் ஜனாதிபதி ஏற்கனவே தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஹற்றனில் தீ விபத்து; ஒரு வீடு முற்றாக சேதம்



(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா கீழ் பிரிவு தோட்ட குடியிருப்பில் ஏற்பட்டுள்ள திடீர் தீ விபத்தினால் ஒரு வீடு முற்றாகவும், மற்றைய வீடு பகுதியளவிலும் எரிந்து சேதமாகியுள்ளன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் ஏற்பட்டுள்ளதுடன் 24 வீடுகள் கொண்ட தொடர் லயன் குடியிருப்பிலேயே இவ்வாறு இடம்பெற்றுள்ளது.

தீ ஏற்பட்ட போது வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதையடுத்து, அயலவர்கள் இணைந்து ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தீயினால் முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், ஆடைகள் என பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

இதேவேளை இது தொடர்பாக ஹற்றன் பொலிஸ் நிலையத்திற்கும், தோட்ட நிர்வாகத்திற்கும் பிரதேச வாசிகளால் தகவல் வழங்கப்பட்டதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தன்போது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தோட்ட நிர்வாகம் தேவையான உதவிகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் வீட்டுத்திட்ட அடிக்கல் நடும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் இருபாலை தெற்கு கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட ஆனந்தபுரம், ஞானவைரவர் கோயிலடி கிராமங்களில் கோப்பாய் பிரதேசசெயலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினரால் முதல்கட்டமாக 81 நிரந் தர வீடுகள் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.திலீபன்,தேசிய வீடமைப்பு அதிகாரசபை கணக்காளர் .க.சுகுமார், வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் நடேசபிள்ளை கஜேந்திரகுமார், இ.மயில்வாகனம், ச.நகுலேஸ்வரி, சி.சிந்துஜா, கிராம சேவையாளர் இ.ஜெயகரன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.மாதவன், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கோப்பாய் பிரதேச தொழில்நுட்ப உத்தியோகத்தர் சி.லக்ஸ்மன், மற்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அ.கோவிந்தன், க.செந்தூரன், க.ஜெரோஷிகா ஆகியோர்களுடன் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.(5-9)

# சபாநாயகருக்கு Pride of Asia விருது



(கொழும்பு)


சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு இந்தியாவிலுள்ள தொழில்நுட்ப விஞ்ஞான அப்துல் கலாம் நிறுவனம் Pride of Asia என்ற கௌரவ விருதை வழங்கியுள்ளது.

இந் நிறுவனத்தின் நிர்வாகம் இந்தியாவின் புகழ்மிக்க ஜனாதிபதி அப்துல் கலாமின் பெயரிலான இந்த விருதை வழங்குவதற்கான தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது.

இந் நிகழ்வில் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் நெருங்கிய நண்பரான விஞ்ஞானி பாரத் விஜய உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(இ-7)

# நெல்விலையை அதிகரிக்கக் கோரி பொலநறுவையில் நேற்று ஆர்ப்பாட்டம்

## 600 விவசாயிகள் திரள்வு




(பொலநறுவை)

இம்முறை பெரும்போகத்தில், நெல் கிலோ ஒன்றுக்கான விலையை 50 ரூபாயாக அதிகரிக்குமாறு கோரி பொலநறுவை விவசாயிகள் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 600 விவசாயிகள், பொலநறுவை-மட்டக்களப்பு பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் காரணமாக, போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன், பொலநறுவை நகருக்கு வருகை தந்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். (இ-7)

# 7 கோடியே 50 இலட்சம் பெறுமதியான போதைப்பொருட்களுடன் பொலிவியா பிரஜை கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் டில்லியிலிருந்து ஒரு தொகை கொக்கெய்ன் போதைப்பொருட்களுடன் இலங்கைக்குள் வர முயற்சித்த பொலிவியா பிரஜையை சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.



பொலிவியாவைச் சேர்ந்த 60 வயதான நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் பிரேஸிலிலிருந்து ஒரு தொகை கொக்கெய்ன் போதைப் பொருளை எதியோப்பியா நோக்கி இந்தியாவின் டில்லி ஊடாக எடுத்துச் சென்று அங்கு தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில், டில்லியிலிருந்து நேற்று மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது அவரின் நடத்தையில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள், குறித்த நபரின் பயணப்பொதியை சோதனையிட்டபோது ஒரு தொகை கொக்கெய்ன் போதைப்பொருட்களை மீட்டுள்ளனர்.

சுமார் 7 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான ஐந்து கிலோ கிராம் கொக்கெய்ன் போதைப் பொருட்களை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வாகனங்களுக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்பு வரி

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் மற்றும் இலத்திரனியல் சாதனம் மூலம் இயங்கும் வாகனங்களுக்கு கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதியிலிருந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு வரி அறவிடப்படுகிறது.

மத்திய நிதியமைச்சும் போக்குவரத்து அமைச்சும் இணைந்து செயற்படுத்தும் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் வாகன அனுமதிப்பத்திரம் பெறும் போது வாகன இயங்கு நிலை கொள்ளளவுக்கேற்ற வகையில் (சீசீ) இத்தொகை யைச் செலுத்த வேண்டும்.

100 சீசீ இற்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள் புதிதாக கொள்வனவு செய்யப்பட ஒரு வருடத்திற்கு இக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. பிற்பட்ட ஐந்து வருடங்கள் வரை 50 சதமும் 5-10 வருடங்களுக்கு ஒரு ரூபா வீதமும் பத்து வருடங்களுக்கு மேற்படுமானால் ஒரு ரூபா 50 சதவீதம் முழுமையான காலத்தொகைக்கும் செலுத்த வேண்டும்.

இலத்திரனியல் மூலம் இயங்கும் வாகன அனுமதிப் பத்திரம் செலுத்தும் வாகனங்களுக்கு 1-5 வருடங்களுக்கு 25 சதமும் 5-10 வருடங்களுக்கு 50 சதமும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு ஒரு ரூபா வீதம் முழுத்தொகையும் செலுத்த வேண்டும்.

பயணிகள் சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு 1-5 வருடங்களுக்கு ஆயிரம் ரூபாவும் 5-10 வருடங்களுக்கு 2 ஆயிரம் ரூபாவும் 10 வருடத்திற்கு மேற்பட்ட வாகனங்களுக்கு 3 ஆயிரம் ரூபா வீதம் அறவிடப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை பிரதேச செயலர் பிரிவிலுள்ள மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் பார்வையிட முடியும். (இ-10)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

இத் தீவிர சனத்தொகை அதிகரிப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை படிப்படியாக வெனினும் உயர்த்துவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது. இந் நடவடிக்கை பொதுவாக அடிப்படைச் சமூக சேவை விரிவாக்கத்தையும் குறிப்பாக மருத்துவ சேவைகளையும் உள்ளடக்கியது.

நோய்வராது தடுக்கப்படல் வேண்டும் என்பதே இப் புதிய சேவைகள் உருவாவதன் பிரதான காரணிகளாக இருந்தன. இதனால் மேலும் பயனுள்ள வகையிலும் திருப்தியுடனும் பணியாற்றும் ஆட்பலத்தை உறுதி செய்யும் நிலை ஏற்பட்டது.

ஒரு நீண்டகால அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் பொதுநலப் பகுதியின் செலவைக் குறைக்க உதவியிருக்கும். மக்கள் மத்தியில் திடீரெனப் பரவும் வியாதிகள் தோன்றிய பின் அவற்றைக் கட்டுப்படுத்தவும் இல்லாதொழிக்கவும் ஏற்படும் செலவைவிட வருமுன் காப்பது செலவைக் குறைத்திருக்கும்.

| சராசரி பிறப்பு, இறப்பு விகிதங்கள் 1871-1901 (ஆயிரத்துக்கு ஒன்று என்ற விகிதத்தில்) | | |
|---|---|---|
| காலம் | பிறப்பு விகிதம் | இறப்பு விகிதம் |
| 1871-1881 | 27.4 | 22.4 |
| 1881-1891 | 29.0 | 24.0 |
| 1891-1901 | 34.1 | 27.3 |

1871 க்கும் 1891 க்கும் இடைப்பட்ட காலத்திலான பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான விகிதத்தில் சிறிதளவு மாற்றமே நிகழ்ந்ததென மேற்படி புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

பிறப்பு விகிதங்கள் இறப்பு விகிதத்தை விட மிகவும் குறைந்த அளவிலேயே அதிகரித்தமையிலிருந்து பெருந் தாக்கத்தை ஏற்படுத்துமளவுக்கு வாழ்க்கைத் தரமும் சமூக நலனும் சீர்திருத்தம் பெறவில்லை என்பதுபோல் தோன்றுகின்றது.

இருந்தபோதிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குறிப்பிடுமளவுக்குப்பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளது.

இலங்கைக்குத் தென்னிந்தியத் தொழிலாளர்கள் குடிபெயர்ந்து வந்ததும் சனத்தொகை அதிகரிப்புக்கு இன்னுமோர் காரணியாகவிருந்தது. மக்கள்





“ பிறப்பு விகிதங்கள் இறப்பு விகிதத்தை விட மிகவும் குறைந்த அளவிலேயே அதிகரித்தமையிலிருந்து பெருந் தாக்கத்தை ஏற்படுத்துமளவுக்கு வாழ்க்கைத் தரமும் சமூக நலனும் சீர்திருத்தம் பெறவில்லை. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத் தில் குறிப்பிடுமளவுக்குப் பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளது. இலங்கைக்குத் தென்னிந்தியத் தொழிலாளர்கள் குடிபெயர்ந்து வந்ததும் சனத்தொகை அதிகரிப்புக்கு இன்னுமோர் காரணியாகவிருந்தது ”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

பரம்பல் பாங்குகளில் இதுவோர் முக்கிய அம்சமாகும். இச் சந்தர்ப்பத்தில் 1901 குடிசன மதிப்பின்படி இலங்கையின் அத்தனை சமூகங்களினதும் சனத்தொகையை இன அடிப்படையில் விபரமாகக் காட்டுவது பொருத்தமாகும்.

| 1901 குடிசனமதிப்பு | | |
|---|---|---|
| சமூகம் | எண்ணிக்கை | நூற்று வீதம் |
| கரையோரச் சிங்களவர் | 1,458,320 | 40.9 |
| கண்டிச் சிங்களவர் | 872,487 | 24.5 |
| இலங்கைத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் | 951,740 | 26.7 |
| இலங்கை முஸ்லிம்களும் இந்திய முஸ்லிம்களும் | 228,034 | 6.4 |
| மலே இனத்தவர் | 11,902 | 0.3 |
| பறங்கியரும் யுரேசியர்களும் | 23,482 | 0.7 |
| ஐரோப்பியர் | 6,300 | 0.2 |
| வேடர் | 3,971 | 0.1 |
| ஏனையோர் | 9,718 | 0.2 |
| மொத்தம் | 3,565,954 | 100.0 |

1901 குடிசன மதிப்பு இலங்கை தமிழரையும் இந்தியத் தமிழரையும் வேறுவேறாகக் கணிக்கவில்லை.

1946 குடி மதிப்பு வரையில் இந்த வேறுபாடு கணிக்கப்படவில்லை. 1946 குடிசன மதிப்பின்போது இலங்கைத் தமிழரைவிட இந்தியத் தமிழர் அதிகமாக இருந் தமை கவனிப்புக்குரியது.

(இந்தியத் தமிழர் 780,589, இலங்கைத் தமிழர் 733,731) இலங்கையின் தீவிர சனத்தொகைப் பெருக்கத்தில் இந்தியத் தமிழரின் குடிப்பெயர்வு முக்கியமென்பதை இப்புள்ளி விபரங்கள் நிரூபிக்கின்றன.

மக்கள் தொகை பெருகி விவசாயம், பெருந்தோட்டம், வியாபாரம் என்பன விருத்தியடைந்தபோது மக்கள் இயல்பாகவே வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய வெவ்வேறு வளமான பிரதேசங்களுக்கு நகர்ந்தனர்.

இதன் காரணமாக சன நெருக்கம் மிகுந்த நகரங்கள் உருவாகின. குறிப்பாகத் தலைநகராகிய கொழும்பின் சனத்தொகை அடர்த்தி அதியுயர்ந்து காணப்பட்டது.

மேற்குறிப்பிட்ட குடிசன மதிப்பின்படி இங்கு சதுர மைல் ஒன்றுக்கு 500 பேர் இருந்தனர். மக்கள் ஐதாகக் காணப்பட்ட உலர்வலய மாவட்டங்களில் ஒரு சதுர மைலுக்கு 50 பேர் என்றவிதத்தில் சனத்தொகை காணப்பட்டது. தமிழ்ப் பிரதேசங்களான மன்னார், வவுனியா மாவட்டங்கள் இதற்குள் அடங்கும்.

மலையகத்தின் அநேகமான மாவட்டங்களான கண்டி, நுவரெலியா என்பனவும் மாத்தளை, காலி, சிலாபம், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களும் இடைத்தர அளவிலான சனத்தொகையை அதாவது சதுர மைல் ஒன்றுக்கு 200 பேரைக் கொண்டிருந்தன.

அதேவேளை மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் ஆகிய மாவட்டங்கள் சதுர மைல் ஒன்றுக்கு 50 பேருக்கும் அதிகமான மக்களைக் கொண்டிருந்தன.

கொழும்பில் காணப்பட்ட வேலைவாய்ப்புக்கள், பொருளாதாரச் செழிப்பு என்பன காரணமாகவே அங்கு சனத்தொகைச் செறிவு அதி உயர்வாக இருந்தது.

(தொடரும்)

# மந்தைகளை காப்பாற்றாத நீங்கள் மனிதர்களை காப்பாற்றுவீர்களா?

## கிழக்கில் போராட்டம்



(செங்கலடி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகளின் உயிரிழப்பைக் கண்டித்தும் இதன் காரணமாக பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டம் செங்கலடி நகரில் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன், கோறளைப்பற்று பிரதேச சபை தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்ஜித், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள்கலந்து கொண்டனர்.

அண்மைக் காலமாக மட்டக்களப்பு மாவட்டம் உட்பட கிழக்கு மாகாணத்தில் கால்நடைகள் அதிகம் இறந்துள்ளன. இதற்கான



காரணங்கள் பல கூறப்பட்டுவந்தாலும் கால்நடைகளின் இறப்பு தொடர்ந்து கொண்டே செல்கிறது.

மாவட்டத்தில் கால்நடைகளின் நடமாட்டம் தரைப் பிரச்சினை நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் உள்ளது. இதனால் கால்நடைகள் சுதந்திரமாக மேய்ச்சலில் ஈடுபடுவதற்கு வன இலாகா அதிகாரிகள் தடைவிதித்து வருகின்றனர்.

இது தொடர்பாக ஆராய்ந்து கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளை அடையாளப்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கையெடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது 'பண்ணையாளர்களின் கண்ணீரைத் துடைக்கவும்', 'வேண்டும் வேண்டும் நட்டஈடு வேண்டும்', 'மந்தைகளை காப்பாற்றாத நீங்கள் மனிதர்களைக் காப்பாற்றுவீர்களா?' போன்ற பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஏறாவூர்ப்பற்று (செங்கலடி) பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.பவதாரணியிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது. (இ-7)

# கிழக்கில் கால்நடை இறப்பு விவகாரம் உரிய தடுப்பு ஏற்பாடுகள் வேண்டும்-நஷீர்



(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில் கால்நடை இறப்பு விடயத்தில் உரிய தடுப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஷீர் அஹமட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்றுப் புதன்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்.

"மட்டக்களப்பு மாவட்டம் உட்பட கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் தற்போது கால்நடைகளின் இறப்பு அதிகரித்துள்ளது. இதனை யாரும் மூடி மறைக்க முடியாது. எனவே கால்நடைகள் தொடர் இறப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு இதுவரை இறந்த கால்நடைகளுக்காக இழப்பீடும் வழங்கப்பட வேண்டும்.

கால்நடைகள் நோய்த் தொற்றுக்குள்ளாகி இறந்து வருவதால் பண்ணைத் தொழில் மேற்கொள்வோரும் சிறிய அளவில் கால்நடைகளைளை வளர்ப்போரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய்த்தொற்றுக் குறித்து தீவிர கவனம் செலுத்தி இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமைச்சர் ஹரிசனின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன். இவ்விடயத்தில் கிழக்கு மாகாண ஆளுநரும் முக் கிய கவனம் செலுத்த வேண் டும்" என நஷீர் அஹமட் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆட்கொணர்வு மனு மீதான 2 ஆம் கட்ட விசாரணை ஜூன் 25 இற்கு தவணை

(பனிக்கன்குளம்)

ஆட்கொணர்வு மனு மீதான 2 ஆம் கட்ட விசாரணை ஜூன் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இறுதி யுத்தத்தின் போது இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வழக்குகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றிலே இடம்பெற்று வந்தது. அந்த வகையிலே ஒரு பகுதியினரது ஆட்கொணர்வு மனு மீதான வழக்கு தற்போது வவுனியா நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு அங்கு இடம்பெறுகின்ற நிலையில் இரண்டாவது கட்டமாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ். லெனின்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணைகளில் குறித்த வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 25 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி ரட்னவேல் தெரிவித்தார்.(2-281)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1663

Search for people, places and things

### கபிலன்

ஆடம்பரத்திற்கு ஆசைப்பட்டு பெண்ணைக் கொடுத்து கஷ்டப்படுவதைவிட உழைத்துப் பாடுபடும் பையனுக்கு பெண்ணைக் குடுங்க நிம்மதியாக இருக்கும்



### லோரன்ஸ்

தந்தை: மகனே நீ பரீட்சையில் பாஸானா உனக்கு ஒரு சைக்கிள் வாங்கித் தாரேன்
மகன்: பெயிலாயிட்டா...?
தந்தை: பத்து சைக்கிள் வாங்கித் தாரேன் சைக்கிள் கடை வைத்து பிழைச்சுக்கோ...




### பகலவன்

வேண்டியவர்களுக்குக்கூட வேண்டாதவர்களாய் மாறிவிடுகிறோம் அவர்களுக்கு வேண்டியதை செய்ய இயலாத சூழ்நிலையில்



### ராகவன்

உருகிக் கரைவதும் இறுகி உடைவதும் நேர்ந்திருக்காது நீர் நீராக இருந்திருந்தால்...




### உதயன்

உதவுங்கள் உதவுங்கள் இவர்களுக்கு உதவிப் பாருங்கள், நித்திரை தேடிவரும், நோய்கள் ஓடிப்போகும், மனதில் நிம்மதி, சந்தோசம் நாடிவரும், நீங்களும் தெய்வமாவீர்கள்



### இந்திரன்

உலகின் மிகப்பெரிய துரோகம் பசிக்கு உணவு வைத்துக் கொல்வது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 2019 ஐ இராணுவ ஆண்டாக பிரகடனப்படுத்தி இராணுவத்தினரை கௌரவிக்க நிகழ்வுகள் ஏற்பாடு



(கொழும்பு)
2019 ஆம் ஆண்டை இராணுவ ஆண்டாகப் பிரகடனப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றி கொள்ளப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டே, இந்த ஆண்டை இராணுவ ஆண்டாகப் பிரகடனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், இராணுவத்தினரை கௌரவிக்கும் நிகழ்வுகளை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

இதன் முதல் கட்டமாக, இராணுவ கொடி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதலாவது கொடியை ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவரான, முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஜம்மிக லியனகே நேற்று முன்தினம் மைத்திரிபால சிறிசேனவுக்கு அணிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக நீதிபதி இளஞ்செழியன் அதிரடி உத்தரவு





கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக மீண்டும் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாந்தர அதிகாரியான எம்.கே.எம். மன்சூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் வழங்கியவிசேட தீர்ப்பின் பிரகாரம் அவர் மீண்டும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக தான் ஏலவே பணியாற்றி வந்த நிலையில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் தான் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக அவர் திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்நிலையில், ஒரு மாத காலத்தின் பின்னர் குறித்த வழக்கிற்கான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிழக்கு மாகாணம் கல்விப் பொதுத் தராதர சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மிகவும் பின்தங்கியுள்ளது என தெரிவித்து கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரோஹித போகொல்லாகம அவரது பதவி காலத்தின்போது எம்.கே.எம். மன்சூரினை கல்விப் பணிப்பாளராக நியமித்திருந்தார்.

அதற்கு முன்னர் அந்த பதவியில் இருந்த எம்.ரி.எ. நிசாமின் நிர்வாக நடவடிக்கைகள் மந்த கதியில் இருந்தமையின் காரணமாக அவர் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டு மன்சூர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

4 மாதங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளராக மன்சூர் கடமையாற்றி வந்த வேளை கடந்த பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் மாகாண கல்விப்பணிப்பாளராக எம்.ரி.எ.நிசாம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது புதிதாக கிழக்கு மாகாண ஆளுநராக பொறுப்பேற்றுள்ள ஹிஸ்புல்லாஹ்வின் தலையீட்டினால் மன்சூர் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டு நிசாம் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தனது பதவி பறிக்கப்பட்டமை அநீதி என குறிப்பிட்டு கல்விப் பணிப்பாளர் மன்சூர் திருகோணமலை உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்த நிலையில் நேற்று அவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களை அமுல்படுத்தக்கூடாது என நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், ஆளுநர் ஹிஸ்புல்லாஹ், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கல்விப் பணிப்பாளர் ஆகியோரை எதிர்வரும் 19 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி இன்றிலிருந்து மன்சூர் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக மீண்டும் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

மன்சூர் மிகவும் ஆளுமை மிக்கவரும், ஒரு கடமையை திறம்பட செய்து முடிப்பவருமான, அவரது கடமை காலத்தில் பல சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொடுத்தவர் எனவும் பல அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலும், இவ்வாறான திறமையான அதிகாரியை பதவியில் இருந்து ஆளுநர் நீக்கியமைக்கான காரணம் தொடர்பிலும் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அத்துடன், ஆளுநர் ஒருவர் எடுத்த முடிவிற்கு எதிராக நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 170 | 200 |
| தக்காளி | 40 | 40 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 70 | 60 |
| கோவா | 25 | 50 | 60 | 60 |
| கரட் | 80 | 90 | 80 | 120 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 70 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 65 | 80 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 85 | 60 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | — | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 100 | 70 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 60 | 120 |
| பீற்றூட் | 50 | 40 | 30 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 300 | 400 |
| போஞ்சி | 120 | 80 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | — | 60 | 120 |
| கீரை – 1பிடி | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 60 | 60 | 60 | 120 |
| முள்ளங்கி | 40 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 35 | 20 | 20 | 40 |
| வல்லாரை | 50 | 30 | 10 | 20 |
| ஈரப்பலா | — | — | 100 | 80 |

# கஞ்சா பண்ணை தீயிட்டு அழிப்பு

(கொழும்பு)
அம்பாறை- பன்னல்கம பிரதேசத்திலிருந்து 8 கிலோ மீற்றர் தொலைவில் அமையப்பெற்றுள்ள வனப்பகுதியொன்றிலிருந்து, கஞ்சா பண்ணையொன்று கண்டுபிடிக்கப்பட்டு, தமண பொலிஸாரால் குறித்த பகுதி சுற்றிவளைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

தமண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்தே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார், குறித்த பண்ணையிலிருந்து 3 ஆயிரத்து 500 கஞ்சா செடிகளை தீயிட்டு அழித்ததாகத் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில், அம்பாறை மற்றும் மட்டக்களப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் நுவன் வேதசிங்க தலைமையின் கீழ் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (2-7)

# செய்தித்துளிகள்

## ஜனாதிபதிக்கான பாதீட்டு ஒதுக்கங்களை எதிர்க்கும் தீர்மானம் பிரதமருக்கு அறிவிப்பு



(கொழும்பு)
ஜனாதிபதியின் கீழ் இயங்கும் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட அனைத்து அமைச்சுக்களுக்குமான நிதி ஒதுக்கீட்டை தோற்கடிப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களின் தீர்மானம் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது குறித்த தீர்மானம் பிரதமரிடம் அறிவிக்கப்பட்டதாக, நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார். அவர்களின் இந்த தீர்மானத்திற்கு சில அமைச்சர்கள் ஆதரவை வழங்க முன் வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)


## அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு பிரி. உயர்ஸ்தானிகர் பாராட்டு!

(கொழும்பு)
காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலகத்தை மாத்தறையில் திறந்து வைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையை இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் பாராட்டியுள்ளார்.

காணாமல் போனவர்களின் குடும்பத்தவர்களுக்கு மாத்திரமன்றி முழு இலங்கைக்கும் தேவையான நடவடிக்கையாக இதனைக் கருத முடியும் என்று அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அந்தப் பதிவில் அலுவலகத்திற்குத் தேவையான ஒத்துழைப்பை கட்சிகள் வழங்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-7)

## மனித எலும்புக்கூடு மீட்பு



(சவுக்கடி)
மட்டக்களப்பு - சவுக்கடி பகுதியில் சந்தேகத்துக்குரிய மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பொலிஸார் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தப் பகுதியில் வீட்டுப் பாவனைக்கான கிணறு ஒன்றை தோண்ட முற்பட்ட வேளையில் நேற்று காலை இந்த மனித எச்சம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்த மேலதிக விசாரணைக்காக பொலிஸ் குழு ஒன்று சம்பவ இடத்துக்கு சென்றிருப்பதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-7)

## ஞானசாரரின் விடுதலையை வலியுறுத்தி துண்டுப்பிரசுரம்



(கொழும்பு)
பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நியாயமற்ற வகையிலேயே சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார் என்ற விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் 50 இலட்சம் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கும் செயற்பாட்டை பொதுபலசேனா அமைப்பு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக நேற்று ஆரம்பித்தது. (இ-7)




# வள்ளி தந்த படிப்பினை!



வள்ளி ஓர் ஏழைச் சிறுமி. ஆனால் பதினொரு வயது நிரம்பிய புத்திசாலிப் பெண். மலையடிவார கிராமம் ஒன்றில் அவள் தனது பெற்றோருடன் வசித்து வந்தாள். வள்ளி, நன்றாகப் புல்லாங்குழல் வாசிப்பாள். அது அவள் தானாகக் கற்றுக் கொண்டது. அவள் எப்பொழுதும் தன் கைவசம் புல்லாங் குழல் ஒன்று வைத்திருப்பாள்.

வள்ளி தந்த படிப்பினை வள்ளியின் தாய், தந்தை இருவரும் வயதானவர்கள். உடல் நிலை சரியில்லாதவர்கள். வேலைக்குச் செல்லாமல் அவர்கள் இருவரும் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தனர். வள்ளிதான் தினமும் காட்டுக்குச் சென்று கிழங்குகளையும் கனிகளையும் சேகரித்துக் கொண்டு வருவாள். அவற்றைப் பெற்றோருக்குக் கொடுத்துத் தானும் உண்டு பசியாறி வந்தாள். இது அவளின் தினசரி வேலைகளில் ஒன்று.

ஒருநாள் காட்டில் சேகரித்த கிழங்குகளுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். சுடுவெயில் நேரம் அவளுக்குத் தாகம் எடுத்தது. அருகாமை ஓடைப் பக்கம் நீர் அருந்தப் போனாள். ஓடை நீரின் சிலுசிலுப்பை உணர்ந்ததும் வள்ளிக்கு மகிழ்ச்சி பிறந்தது!

ஓடையருகே அமர்ந்து கொண்டு, இடுப்பில் செருகி வைத்திருந்த புல்லாங்குழலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள்.

சிறிதுநேரம் சென்றிருக்கும்... அவள் முன்பாக இரண்டு சேவகர்கள் வந்து நின்றனர். அவர்களைப் பார்த்தவுடன் அரண்மனைக் காவலர்கள் என்பதைப் புரிந்து கொண்டாள்.

"சிறுமியே, உன்பெயர்என்ன? இந்தக் காட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்கள் அவர்கள்.

"என் பெயர் வள்ளி. நான் காட்டில் கிழங்கு எடுக்க வந்தேன்!" என்ற வள்ளி தன் கைவசம் இருந்த கிழங்குக் கொத்தை எடுத்து அவர்கள் முன் காட்டினாள்.

"அருகாமையில்தான் அரசர் இருக்கிறார். அவருக்கு உன் புல்லாங்குழல் இசை கேட்டு விட்டது. யாரென்று பார்த்து அழைத்து வரச் சொன்னார்" என்ற சேவகர்கள், வள்ளியை மன்னரிடம் அழைத்துச் சென்றனர்.

வள்ளி, இதுவரை மன்னரை அருகாமையில் கண்டதில்லை. அவர் இந்தக் காட்டுக்கு அடிக்கடி வேட்டையாட வருவார் என்பது மட்டும் தெரியும். மன்னருக்குத் தனது புல்லாங்குழல் இசை பிடித்துவிட்டது போலும்!

சரிதான்... இன்றைக்கு மன்னரை மிக அருகாமையில் பார்க்கப் போகிறாள்.

மன்னர் தன்னிடம் என்ன கேட்பார்? தன்னைப் பற்றியா? தன் குடும்பத்தைப் பற்றியா? இப்படி ஏராளமான கேள்விகள் மனதில் தோன்ற, மிகுந்த யோசனையுடன் வள்ளி சென்றாள். அவளது எதிர்பார்ப்புக்கு முற்றிலும் மாறாக அமைந்தது மன்னருடனான அவளுடைய சந்திப்பு! வேட்டைக்கு வந்த இடத்தில், தாற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த கூடாரம் ஒன்றில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார் மன்னர்.

மிகுந்த வறுமைத் தோற்றத்தில் இருந்த வள்ளியை, அவர் ஒரு பூச்சியைப் பார்ப்பது போலப் பார்த்தார்.

"ஓ..! நீதான் அந்தப் புல்லாங்குழல் ராணியா? புல்லாங்குழல் நன்றாக வாசிப்பாயா? எங்கே வாசி கேட்கலாம்... நான் சிறிது நேரம் கண்ணயர்ந்து கொள்கிறேன்" என்றார் மன்னர் எள்ளி நகையாடும் குரலில்.

வள்ளிக்கு அதிர்ச்சியாக இருந்தது! ஒரு தேசத்தை ஆளும் அரசருக்கு, ஒரு சிறுமியிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது தெரியாதா? இந்த வயதான அரசரின் அரண்மனையில் வள்ளியின் வயதையொத்த சிறுவர்கள் யாருமில்லையா? வள்ளி குழம்பிப் போனாள்.

மன்னர், தன்னை ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்பது அவளுக்கு நன்றாகப் புரிந்தது! அவருக்காக, அவள் புல்லாங்குழல் இசைக்க விரும்பவில்லை. மன்னரின் வார்த்தைகள் கட்டளை ஆயிற்றே? எப்படித் தவிர்ப்பது என்று யோசித்தாள். சற்றே யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தாள்.

நிதானமாகப் பேச ஆரம்பித்தாள். "மன்னா! ஏறுவெயில் நேரம்தான்... இருந்தாலும் ஈரக்காற்று அவ்வப்போது உடலைத் தழுவிச் செல்லவே செய்கிறது. ஓடைநீர் சலசலக்கிறது. காய்ந்த இலைச்சருகுகளோ சரசரக்கின்றன. அங்கும் இங்குமாய் பறவைகளும் பண் இசைக்கின்றன. வண்டுகளின் ரீங்காரமும் கேட்கின்றது. ஒட்டுமொத்த கானகமே தங்களுக்காகக் கானம் இசைக்கும் போது, தாங்கள் சிறு துயில் கொள்ளத் தடை ஏது? என்னை மன்னியுங்கள் மன்னா..!" என்று மடமடவென்று கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டு சட்டென்று அகன்று போனாள்.

ஒரு சிறுமியிடமிருந்து இப்படி ஒரு சாதுர்யமான பதிலை மன்னர் எதிர்பார்க்கவில்லை! ஒரு கணம் அசந்து போனார். அவர் உட்பட அங்கிருந்த யாரும் வள்ளி செல்வதைத் தடுக்கவில்லை!

வீட்டுக்கு வந்து, கிழங்குகளைச் சமைத்து பெற்றோருக்குத் தந்துவிட்டுத் தானும் உண்டு சற்று ஓய்வாக இருந்தாள். மாலை மயங்கிக் கொண்டிருந்தது. அப்போது குடிசைக்கு வெளியே ஆள் அரவம் கேட்டது. எழுந்து சென்று வெளியே பார்த்தாள். மன்னர்தான் தனது படை பரிவாரங்களுடன் வந்திருந்தார்.

இதற்குள் அக்கம்பக்கம் கூட்டம் சேர்ந்துவிட்டது. தனது குதிரையை விட்டு இறங்கி வந்த மன்னர் வள்ளியின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டபடி, "என்னை மன்னித்து விடு வள்ளி!" என்றார்.

வள்ளிக்குக் கூச்சமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது! ஒன்றும் புரியவில்லை!

"தேசத்தை ஆளும் ஒரு ராஜா தனது குடிமக்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டுமே தவிர ஆணவத்தைக் காட்டக் கூடாது. அதுவும் ஒரு சிறுமியிடம் தனது அகங்காரத்தைக் காட்டக்கூடாது.

நான் மறந்து போன ஒரு விடயத்தை எனக்கு ஞாபகப் படுத்தி விட்டாய், வள்ளி! மிக்க நன்றி!" என்றார் மன்னர் நெகிழ்வான குரலில். அவரே தொடர்ந்து பேசினார்...

"கற்றறிந்த எத்தனையோ அறிஞர்கள், பண்டிதர்கள் தினமும் என்னை நாடி வருகின்றனர். அவர்கள் என்னிடமிருந்து எதையாவது பெற்றுச் செல்வதற்காக, என்னைத் துதி பாடக் கொஞ்சமும் தயங்குவதில்லை! என்னிடம் எவ்வளவு கூடுதலாகப் பெற முடியும் என்பதே அவர்களின் எண்ணமாக இருக்கும். அவர்கள் யாரும் தங்கள் மேதைமை குறித்து ஒருபோதும் பெருமிதம் கொண்டதில்லை! ஆனால் ஒரு சிறுமியான நீ, இளங்கன்று பயமறியாது என்பதுபோலத் தன்மானம் எத்தனை உயர்ந்தது என்பதை எனக்கு அழகாக உணர்த்தி விட்டாய். உனக்கு என்ன வெகுமதி வேண்டும்? கேள்... நான் தருகிறேன்... வள்ளி!" என்று முடித்தார் மன்னர்.

"என் பெற்றோர்கள் இருவரும் இழந்த ஆரோக்கியத்தை மீண்டும் பெற வைத்தியம் செய்ய வேண்டும். விட்ட பள்ளிப் படிப்பை நான் மீண்டும் தொடர வேண்டும்! இதுதான் எங்களுக்கு உண்மையான வெகுமதி, மன்னா..!" என்று தழுதழுத்தாள் வள்ளி.

"நீ கேட்டது எல்லாம் நிச்சயமாக உனக்குக் கிடைக்கும்படி செய்கிறேன். நான் வருகிறேன்..!" என்ற மன்னர் தனது பரிவாரங்களுடன் கிளம்பிப் போனார்.

## பொது அறிவு

- இந்திய அரசு அளிக்கும் பத்மஶ்ரீ விருதில், பத்ம வார்த்தை எந்த பூவைக் குறிக்கும்?

  **தாமரை**

- எந்த மலரின் தேநீர் சீனா நாட்டினர் பருகுகின்றனர்?

  **மல்லிகை. அங்கு இதனை மல்லிகைப் பூ தேநீர் என்றழைக்கிறார்கள்.**

- எது இந்தியாவில் கட்டப்பட்ட முதல் கப்பல் செப்பனிடும் துறை?

  **மும்பையில் சாசன் கப்பல் செப்பனிடும் துறை. இது தற்போது மீன் சந்தையாக உள்ளது.**

- இந்தியா சுதந்திரம் அடைந்தபோது காஷ்மீர் மன்னர் யார்?

  **ஹரி சிங்**

- 2010 ஆம் ஆண்டும், **FIFA** (பிபா) உலக கோப்பையில் பயன்படுத்தப்பட்ட பந்தின் பெயர் என்ன?

  **ஜபுலனி (Jabulani)**

## கைவீசம்மா கைவீசு

கைவீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு
சந்தைக்குப் போகலாம் கைவீசு
சர்க்கரை வாங்கலாம் கைவீசு

ரயிலில் போகலாம் கைவீசு
ராட்டினம் ஆடலாம் கைவீசு
சொக்காய் வாங்கலாம் கைவீசு
சொகுசாய்ப் போடலாம் கைவீசு
கோவிலுக்குப் போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கைவீசு



காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.

*- தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வட - கிழக்குக்கான நிதி வந்தவாறு போகுமோ!

நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் குறித்த கருத்துக்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

வழமைபோல் ஆளுந்தரப்பு சமர்ப்பிக்கின்ற வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கின்ற மரபை எதிர்க் கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் தவறாமல் பின்பற்றி,

ஏமாற்று வரவு செலவுத் திட்டம் எனத் திருவாய் மலர்ந்துள்ளார்.

தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆளுங் கட்சிச் சார்புடையது என்பதால், வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவான கருத்தையே முன்மொழிய வேண்டும்.

அந்த வகையில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான நிதி ஒதுக்கீட்டைப் பாராட்டியுள்ளார்.

அவர் பாராட்டியதன் அடிப்படையில், இம்முறையும் வரவு செலவுத்திட்டத்தை கூட்டமைப்பு ஆதரித்து வாக்களிக்கும் என்பதை அடித்துக் கூறமுடியும்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வரவு செலவுத் திட்டத்தைப் பாராட்டியுள்ளார் எனும்போது கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கொண்டுள்ள நிலைப்பாடு என்ன என்றால்,

நிதானமாக ஆராய்ந்த பின்பே கருத்துரைக்க முடியும் என்பதாக இரா.சம்பந்தரின் கருத்து அமைந்துள்ளது.

ஆகட்டும் பார்க்கலாம் என்று கர்மவீரர் காமராஜர் கூறுவதுபோல, இரா.சம்பந்தர் அவர்களும் சில சொற்களைத் தனக்குச் சொந்தமாக்கி வைத்துள்ளார்.

நாங்கள் ஆராய்கிறோம்; பொறுத்திருந்து பார்ப்போம்; கருத்துக்கூற முடியாது; கட்சியின் உறுப்பினர்களுடனும் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் அவர் அடிக்கடி பயன்படுத்துகின்ற சொற்பிரயோகம்.

இருந்தும் அச்சொற்பிரயோகங்கள் எந்த வித வலிமையும் கொண்டவை அல்ல. ஏனென்றால் கூட்டமைப்பின் தலைவர் என்ற பதவி அவரிடம் இருப்பது பெயரளவில் மட்டுமே. அவர் என்னதான் கூறினாலும் அவை எதுவும் கட்சியில் அரங்கேறப் போவதில்லை என்பது சர்வநிச்சயம்.

இதற்கு நல்ல உதாரணம் சபாநாயகர் தெரிவின்போது கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருக்கே வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டபோதும் இரா.சம்பந்தரின் கோரிக்கையை கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தூக்கி எறிந்து விட்டு, கரு ஜெயசூரியவுக்கே தமது ஆதரவை வழங்கினர்.

ஆக, வரவு செலவுத் திட்டம் குறித்த சம்பந்தரின் கருத்துக்கள் ஒரு சம்பிரதாயமானவையேயன்றி வேறில்லை.

இவை ஒருபுறமிருக்க, வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி உரிய காலத்துக்குள் வழங்கப்படுமா? அல்லது நவம்பர் மாதக் கடைசியில் வழங்கிவிட்டு டிசம்பர் 31ஆம் திகதிக்குள் செலவழிக்காவிட்டால், திறைசேரி மீளப் பெற்றுக் கொள்ளும் என்ற நிபந்தனையின் கீழ் வந்த நிதி வந்தவாறே போய்ச் சேருமா? என்பதையெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மட்டுவிலில் இரண்டு வீடுகள் மீது தாக்குதல்

## வாள்வெட்டுக்குழு அட்டகாசம் தொடர்கிறது

## இளைஞனின் கால் முறிவு; மோ.சைக்கிள் பறிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மட்டுவில் கிழக்குப் பகுதியிலுள்ள இரண்டு வீடுகள் மீது நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு 10 மணியளவில் வாள்வெட்டுக் குழுவினர் தாக்குதல் நடத்தி அட்டகாசம் புரிந்துள்ளதுடன் இளைஞன் ஒருவரை தாக்கி காயப்படுத்தியுமுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மட்டுவில் கிழக்கு சாவகச்சேரி பகுதியில் உள்ள தனியார் வங்கி உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு 10 மணியளவில் இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் தலைக கவசம் அணியாமல் வந்த மூவர் அடங்கிய குழு வாள்கள் மற்றும் கோடரிகளால் தாக்குதல் நடத்தியுள்ளது. அதன் பின்னர் வங்கி உத்தியோகத்தரின் வீட்டிற்கு எதிரே உள்ள வீட்டு வேலி தூண்களையும் உடைத்து நாசமாக்கியுள்ளனர்.

தொடர்ந்து மட்டுவில் கமலாசினி பாடசாலைக்கு அருகில் நின்று அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனை தட்டிக்கேட்க சென்ற இளைஞன் ஒருவரை வாள்வெட்டுக் கும்பல் கடுமையாக தாக்கியுள்ளது. அதன் பின்னர் தாக்குதலுக்கு இலக்கான இளைஞனின் மோட்டார் சைக்கிளைப் பறித்துக் கொண்டு வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த இருவர் தப்பியோடியுள்ளனர். உடனடியாக பிரதேச இளைஞர்கள் இணைந்து வாள் வெட்டுக் குழுவைச் சேர்ந்த மற்றொருவரை மோட்டார் சைக்கிளுடன் மடக்கிப் பிடித்துள்ளனர். அதன் பின்னர் பிடிபட்டவரின் உதவியுடன் மோட்டார் சைக்கிளுடன் தப்பியோடிய இருவரையும் பிடித்து, மொத்தமாக மூவரை சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பறித்துக்கொண்டு சென்ற மோட்டார் சைக்கிளை வாள்வெட்டுக் கும்பல் சேதப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். வாள்வெட்டுக் கும்பல் தாக்கியதில் கால் முறிந்த நிலையில் மட்டுவில் கிழக்கைச் 25 வயதான வாகீசன் என்ற இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைககப்பட்டுள்ளார். வாள்வெட்டுக் கும்பலின் அட்டகாசம் தொடர்பாக உடனடியாக சாவகச்சேரி பொலிஸார் மற்றும் அவசர பொலிஸ் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றுக்கு தெரியப்படுத்திய போதிலும் பொலிஸார் வரவில்லை எனக் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக வங்கி உத்தியோகத்தர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார். மட்டுவில் பகுதியில் தற்போது வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை மட்டுவில் தெற்கில் மூவரை வாள்வெட்டுக் கும்பல் வெட்டிக் காயப்படுத்தியதுடன் மோடடார சைக்கிளையும் தீயிட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## 'பொன்னொளி நகர்' கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு மூளாயில் கல்வி இராஜாங்க அமைச்சா திருமதி விஜயகலா மகேஸ வரனின் விசேட பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட 176 ஆவது மாதிரிக் கிராமமான "பொன்னொளி நகர்" கிராமத்தை நாளை 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ மக்களிடம் கையளிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ. சரவணபவன், சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், மாவை. சேனாதிராசா, வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## ஜனாதிபதியைக் கொல்லச் சதி நாலக சில்வாவிற்கு எதிராக போதுமானளவு சாட்சிகள்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவிற்கு எதிராக போதுமானளவு சாட்சிகள் இருப்பதாக சட்டமா அதிபருக்கு பதிலாக ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தீலிப பீரிஸ் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கு நேற்று கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா பிரபல பாதாள உலக தலைவரான மாகந்துரே மதூஷ் மற்றும் பிரபல பாடகர் அமல் பெரேராவுடன் தொடர்பில் இருந்துள்ளதாகவும் அவர் அதனை மிகவும் இரகசியமான முறையில் மேற்கொண்டுள்ளதாகவும் பிரதி சொலிஸ்டார் ஜெனரல் தீலிப பீரிஸ் கோட்டை நீதவான் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார்.

குறித்த கருத்துக்களை விசாரித்த கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க, அடுத்த விசாரணையின் போது நாலக டி சில்வாவிற்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள சாட்சிகள் தொடர்பில் அறிக்கை ஒன்றை நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்தற்கு உத்தரவிட்டுள்ளார்.(இ-7)

## திருமணம் செய்வதாக ஏமாற்றிய பெண்

### கோப்பாய் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

திருமணம் செய்வதாகக் கூறி ஆணொருவரை ஏமாற றிய பெண்ணை நேற்றைய தினம் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

கடந்த மாதம் ஐரோப்பிய நாடொன்றிலிருந்து வருகை தந்த நபரை திருமணம் செய்வதாகக்கூறி அவரிடமிருந்து பணம், பொருள் என்பவற்றை அபகரித்து தலைமறைவாகிய பெண் சில நாட்களுக்குப் பின் தனது காதலனைப் பார்க்க யாழ்ப்பாணம் வந்த நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

முதற்கட்ட விசாரணையின் பின்னர் மேலதிக விசாரணைக்காக கோப்பாய் பொலிஸார் குறித்த பெண்ணை முல்லைத்தீவுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். (ம-3,10)

## சத்திய தரிசனம்

### வந்தால் வரட்டும் சோதனை



❖ இறைவனை நம்புபவர்கள் நேரில் பார்க்க வேண்டும் என்று சொல்வதில்லை. இந்த நம்பிக்கையே வாழ்விற்கு உறுதி தரும்.

❖ இறைவன் விதிக்கும் கட்டளைக்கு எத்தனையோ அர்த்தம் உண்டு. அவை நமக்கு விளங்காமல் இருக்கலாம். ஆனால், அதைப் போற்றி வாழ்வதே நமக்கு நன்மை தரும்.

❖ இறைவனின் சோதனை மிக அவசியம். அதை சாதனையாக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, வேதனையாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

❖ உடம்பைத் திருத்தி, உள்ளத்தைப் பண்படுத்தி, வாழும் விதத்தை சீரமைத்து கொண்டால் நாம் அனைவரும் நல்லவர்களாக வாழ முடியும்.

❖ அனைத்தும் இறைவன் கொடுத்தவை, அவனுக்கே உரியவை என்று நினைத்துவிட்டால் நம்முடைய நினைவிலும், செயலிலும் தூய்மை இருக்கும்.

❖ உங்களுக்கு ஏற்ற முறையில் பக்தியில் ஈடுபடுங்கள். இறைவன் அருள் நிச்சயமாகக் கிடைக்கும்.

❖ எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றுபட வேண்டும். சிந்தனையும் செயலும் மனச்சாட்சிக்கு இணங்கி இருக்க வேண்டும்.

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் பாடசாலையின் ஞானகாந்தன் விளையாட்டு மைதானத்தில் அதிபா ந.மகேந்திரராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) பொ.ரவிச்சந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதோடு பரிசில்களை திருமதி ரவிச்சந்தரன சங்கமித்திரா வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** திருவையாறு, இரணைமடு, சாந்தபுரம், SFHQ இரணைமடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** பட்டாணிச்சூர் கிராமத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** நானாட்டான் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப் படும்.

## வடக்கின் மாபெரும் போரில் வெற்றி

# யாழ்.மத்திய கல்லூரிக்கா
# சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கா

## இன்று ஆரம்பமாகின்றது பலப்பரீட்சை





“பிக் மட்ச் தொடங்கப் போகுது, ரிக்கெட் போட்டியா? நானும் போறன்” என வெளிநாடுகளில் ஆங்காங்கே குந்திக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தான் தொடக்கம், வெளி மாவட்டங்களில் உள்ளவர்கள், உள்ளூரில் உள்ளவங்கள் என அனைவரையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரும் கிரிக்கெட் திருவிழா தான் வடக்கின் மாபெரும் போர்.

புனித பரியோவன் கல்லூரி என அழைக்கப்படும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையில் வருடாந்தம் நடைபெறும் கிரிக்கெட் சமரே வடக்கின் மாபெரும் போர் என அழைக்கப்படுகின்றது.

நூற்றாண்டுகள் கடந்த 113 ஆவது போட்டியானது இன்று 7, 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் பாடசாலைகள் கிரிக்கெட் வரலாற்றில் தெற்கில் நடைபெறும் நீலங்களின் போரை அடுத்து, மிகவும் பழைமை வாய்ந்த வரலாற்றைக் கொண்டமைந்ததாக வடக்கின் மாபெரும் போர் உள்ளது.

வடக்கின் மாபெரும் போர் 1901 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று 112 போட்டிகளைக் கடந்து வந்துள்ளது.

இதுவரையில் நடைபெற்ற 112 போட்டிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 36 போட்டிகளிலும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 28 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

40 போட்டிகள் சமநிலையிலும் 7 போட்டிகளின் முடிவுகள் தெரியாத நிலையிலும் ஒரு போட்டி கைவிடப்பட்டும் இருக்கின்றன.

இறுதி இரண்டு வருடங்களில் 2017 ஆம் ஆண்டு சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றியொன்றைப் பதிவு செய்ததுடன், 2018 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, ஒரு விக்கெட்டால் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

### வரலாற்றுச் சாதனைகள்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1993 ஆம் ஆண்டு 9 விக்கெட் இழப்பிற்கு 354 ஓட்டங்களை எடுத்தமை அதிகூடிய ஓர் இனிங்ஸிற்கான ஓட்டமாகவுள்ளது. சென்.ஜோன்ஸ் அணி, 1999 ஆம் ஆண்டு 6 விக்கெட் இழப்பிற்கு 326 ஓட்டங்களை எடுத்தமை அந்த அணியின் அதிகூடிய ஓட்டமாகவுள்ளது.

112 கால வரலாற்றில் இதுவரையில் 20 சதங்கள் மொத்தமாக அடிக்கப்பட்டுள்ளன. சதங்களில் சென்.ஜோன்ஸ் வீரன், சுரேஸ்குமார் 1990 ஆம் ஆண்டு பெற்ற 145 ஓட்டங்கள் அதிகூடிய தனிநபர் ஓட்டமாகவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்தியின் பந்து வீச்சாளர் வி.சண்முகம் 1951 ஆம் ஆண்டு 26 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை வீழ்த்தியமை, வடக்கின் மாபெரும் போரின் சிறந்த பந்து வீச்சாக இன்றுவரையில் உள்ளது. சென்.ஜோன்ஸ் அணியின் ஈ.ஜி.தேவநாயகம் 1950 ஆம் ஆண்டு 33 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை வீழ்த்தியமை, அடுத்த சிறந்த பந்துவீச்சு பெறுபேறாகவுள்ளது.

இணைப்பாட்டம் என்று பார்க்கையில், 1999 ஆம் ஆண்டு சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஏ.ரி.கௌரிபாகன் - கே.பிரகாஸ் ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்காக 200 ஓட்டங்களை கடந்தமை உள்ளது.

### சென்.ஜோன்ஸ்

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி இம்முறை பி.லவேந்திராவின் பயிற்றுவிப்பில் உருவாக்கியுள்ளது.

அணியின் தலைவராக முர்பின் அபின்ாஸ் உள்ளார். தொடர்ந்து அணியில், நாகேந்திரராஜா சௌமியன், தெய்வேந்திரன் டினோசன், பரராஜசிங்கம் எல்சான் டேனுசன், நாகேஸ்வரன் றதுசன், மகேந்திரன் ஹேமதுசாந், கிறிஸ்ரி பிரசன்னா தனுஜன், அன்ரன் செல்வதாஸ் சரண், அன்ரன் அபிசேக், கமலபாலன் சபேசன், சிவராஜா பிரணவன், யோகதாஸ் விதுசன், கனகரத்தினம் திஸான், குகனேஸ்வரன் கரீசன், சிறிதரன் சஜித், தியாகராஜா வினோதன், சுதாகரன் சஞ்சித், அந்தோனிப்பிள்ளை சுகீதன், கஜேந்திரன் தமிழ்கதிர பிரஞ்சன், ஜெயமிரகன் மரிய திலக்ஸன் ஆகியோர் உள்ளனர்.

### யாழ்ப்பாணம் மத்தி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 15 வருடகால அனுபவம் கொண்ட சுரேஸ்மோகனின் பயிற்றுவிப்பில் உருவாகியுள்ளது. அணியின் தலைவராக, இலங்கை 19 வயதுப்பிரிவு தேசிய அணியில் இடம் பிடித்த வீரன் செல்வராசா மதுசன் உள்ளார். இவருடன், 19 வயதுப்பிரிவு தேசிய அணியில் இடம்பிடித்த சுழற்பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் கலக்கும் விஜஸ்காந்தும் உள்ளார்.

மேலும் அணியில், ஏ.ஜெயதர்சன், கே.இயலரசன், ஆர்.ராஜ் கிளிண்டன், எஸ்.நிதர்சன், ரி.விதுசன், எஸ்.சாரங்கன், ரி.கௌதம், என்.திவாகரன், ஏ.நிதுசன், கே.பிரவீன்ராஜ், பி.இந்துஜன், ரி.லுபியன், எஸ்.இளங்கீதன், எஸ்.பிரசாத், பி.குகசதுாஸ், பி.ஏ.கஜன் ஆகியோர் உள்ளனர்.

கடந்த ஆண்டு பெற்ற வெற்றியைத் தொடர்ந்து வெற்றி எண்ணிக்கையில் தங்களை அதிகப்படுத்திக் கொள்ளும் முனைப்பில் யாழ்ப்பாணம் மத்தியும், தங்களுடைய வெற்றிப் பயணத்தை மீண்டும் ஆரம்பித்து, தங்களின் உறுதியான நிலையை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்ற உத்வேகத்துடன் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் களமிறங்கவுள்ளது.

இன்று தொடக்கம் 9 ஆம் திகதி வரையும் வடக்கின் அனைத்து கிரிக்கெட் ரசிகர்கள், புலம்பெயர்ந்துள்ளவர்கள் அனைவரது கண்களும் ஏதோவொரு வழி மூலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தையே பார்த்துக் கொண்டிருக்கும். (க-26)









தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற விளையாட்டு விழாவில் 31 ஆவது தேசிய இளைஞர் பிரதேச மட்ட விளையாட்டு விழாக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையிலேயே ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான குழு போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

முத்தையன்கட்டு பாரதி விளையாட்டு ம்மைதானத்தில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட போட்டியில் ஆண்களுக்கான போட்டியில் மாங்குளம் ஜெயந்த் ஸ்டார் இளைஞர் கழகம் முதலாமிடத்தையும் ஒட்டுசுட்டான் ஈஸ்வரன் இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன. பெண்கஊளுக்கான கரப்பந்தாட்ட போட்டியிலே முத்தையன்கட்டு பாரதி இளைஞர் கழகம் முதலிடத்தையும் கூழாமுறிப்பு சென்.ஜோன்ஸ் இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொணுண்டுள்ளன. (க-281)

# வடமாகாண விளையாட்டுத்துறை முன்னேற்றம் கண்டுள்ளது

## சத்தியசீலன் தெரிவிப்பு

வடக்கு மாகாண விளையாட்டுத்துறை பல முன்னேற்றங்களைக் கண்டு வருவதாக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் தலைமை தாங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். மேலும் அவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், தற்போது வடக்கு மாகாண விளையாட்டு வீர, வீராங்கனைகள் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர். இலங்கையின் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் தேசியு வீரர்களை வைத்து வடக்கு வீர,வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிப்போம் என்ற நல்ல செய்தியை வடக்கு ஆளுநர் எம்மிடம் தெரிவித்துள்ளார். வடக்கு விளையாட்டுத்துறைக்கு வெளிநாட்டு உதவிகள் மிக மிக அவசியமானதாகவுள்ளது.

அத்துடன் கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர்கள் தட்டுப்பாட்டிற்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (க-30)

# வரும் சனிக்கிழமை பாடசாலை நாள்

### வடமாகாண கல்வி அமைச்சு

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சிவராத்திரி தினத்துக்கு அடுத்த நாளான 05.03.2019 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வட மாகாண ஆளுநரின் பணிப்புரைக் கமைவாக வட மாகாண பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இந் நாளுக்குரிய பதில் பாடசாலை நாளை மறுதினம் சனிக்கிழமை நடத்துமாறு வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-105)

## ஜெனிவா பிரேரணையில்...

முன்வைத்துள்ளன.

அத்தோடு தற்போதைய அமர்வில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப் படவுள்ள தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இணை அனுசரணை வழங்க வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் அரசாங்கம் அதற்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளது. இதேவேளை இந்த பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதாக சுவிட்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா, ஒஸ்ரியா, டென்மார்க், இந்தியா உள்ளிட்ட நாடுகளும் அறிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை வளாகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இலங்கை குறித்த பிரேரணை தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு அமைப்புக்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## ஜெனிவா பிரே...

வலியுறுத்துகின்றன. போதாதற்கு இப்பொழுது மைத்திரியும் வலியுறுத்துகிறார். இந்த நிலைமையில் எப்படி இந்த விடயத்தை கையாளலாம் என்று சுமார் 20 நிமிடங்கள் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆலோசித்தனர்.

ஜனாதிபதியின் நேற்றைய அறிவிப்பின் மூலம், ஜெனீவாவில் இலங்கை தொடர்பான பிரேரணை தோல்வியடையவும் வாய்ப்புள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. பிந்திய நிலவரப்படி, பிரேரணைக்கு ஆதரவான தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்ய வாய்ப்பிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்கள் தெரிவித்தனர். சில தூதரக தொடர்புகளின் ஊடாக இந்த தகவல் கிடைத்திருக்கலாமென கருதப்படுகிறது.

இலங்கை தனது பிரச்சினையை தானே கவனித்துக் கொள்ளும் என ஜனாதிபதியின் பிரதிநிதிகள் ஜெனிவாவில் அறிவித்தால், ஜனாதிபதியை நாட்டை பகைத்துக்கொள்ள நாடுகள் விரும்பாது. அதனால் அவை பிரேரணைக்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கலாமென உத்தியோகப்பற்றற்ற முறையில் கிடைத்த தகவலை, கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆராய்ந்தனர்.

சர்வதேச கண்காணிப்பு பொறிமுறையொன்றின் கீழ் இலங்கையை வைத்திருப்பது அவசியம் என்பதை நேற்று கூட்டமைப்பு எம்.பிக்கள் ஏகோபித்து எடுத்தனர். ஆனால், புதிய நெருக்கடி நிலைமையில், அவை எப்படி கையாள்வதென்பது தொடர்பில் நேற்று உறுதியான முடிவுகள் எடுக்கப்படவில்லை. இன்றும் தொடர்ந்து பேசுவதென முடிவாகியுள்ளது. (ம-3)

## காணாமலாக்கப்பட்டோருக்கு...

ஆராய்ந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

மேலும், காணாமலாக்கப்பட்டோருக்கான தீர்வுகள் கிடைக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்தகால யுத்தத்தினால் பாதிப்புற்ற இலங்கையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை சந்தித்து கலந்துரையாடியதாக தெரிவித்த அவர், அரசாங்கத்துடன் கலந்துரையாடி தீர்வுகளுக்கு முயற்சிக்க வேண்டும் எனவும் கூறினார்.

மேலும்யாழ்ப்பணத்திற்கு தொடர்ந்தும் விஜயங்களை மேற்கொள்ள ஆர்வமாக இருப்பதாகவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பீ.டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். (ம-3)

## ஜனாதிபதி - பிரதமர்.

ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டை நிராகரித்துள்ள ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், ஜெனிவா கூட்டத்தொடரில் முன்வைக்கப்படும் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பாக முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க வேண்டாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ள நிலையிலேயே, அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

ஜெனிவா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதன் மூலம், உறுதியானதும், நீடித்து நிலைக்கக் கூடியமான நல்லிணக்கத்தை அடைவதற்கு அரசாங்கம், அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த நடைமுறைப்படுத்தல் செயற்பாடு, இலங்கையர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக சுமத்தப்படும் அனைத்துலகப் போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து தடுக்கின்ற உத்தியாக இருக்கும்.

இலங்கையில் நிலையான நல்லிணக்கத்தை எட்டுவதற்காக பல்வேறு உறுதியான செயல்முறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனைத்து பொறிமுறைகளும், நல்லிணக்கச் செயல்முறைகளும், இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன.

நாட்டில் போர் வீரர்களுக்காக முதலைக்கண்ணீர் வடிப்பவர்கள், மாலி, மேற்காபிரிக்கா உள்ளிட்ட நாடுகளில்படையினர்ஐ.நா. அமைதிப் படையில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்பதை மறந்து விட்டனர்.

ஜெனிவா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியதால் தான் இது சாத்தியமானது.

மேலும் இராணுவ ஒத்துழைப்பு விரிவடைந்துள்ளதுடன், படையினருக்கான பயிற்சி வாய்ப்புகளும் கிடைத்துள்ளன. எமது படையினரின் கௌரவம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை செயல்முறைகளின் மூலம், அனைத்துலக சமூகத்தின் நம்பிக்கை மீளப் பெறப்பட்டிருக்கிறது.

மாலியில் இறந்த இரண்டு படையினரின் இறுதிச்சடங்குகளில் இதனை நாம் காண முடிந்தது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட...

வதைத் தடுக்கும் கட்டளையை வழங்குமாறு முன்னாள் கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் வசந்த கர்னகொட உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனுவிலேயே இந்தத் தகவலை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயர் முதன் முறையாக இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2008 - 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பின் தெஹிவளை, கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்களில் 5 தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் வெள்ளை வானில் கடத்திச் சென்று காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது தொடர்பிலான வழக்கு விசாரணை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இதுவரையில் கடற்படை அதிகாரிகள் உட்பட 13 கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சிலர் விளக்கமறியலில் உள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் நடைபெற்ற காலப்பகுதியான 2008 - 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடற்படைத் தளபதியாகவிருந்த வசந்த கர்னகொடவும் வழக்கில் 14ஆவது சந்தேகநபராகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மூத்த அரச சட்டவாதி கோட்டை நீதவான் நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தார்.

மேலும் வசந்த கர்னகொட வெளிநாட்டுக்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் அவரது கடவுச்சீட்டு கோட்டை நீதவான் நீதிமன்றால் கடந்த மாதம் இடைநிறுத்தப்பட்டது. அத்துடன் அவரிடம் விசாரணைகளை முன்னெடுக்கும் முயற்சியையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்தனர். எனினும் அவர் தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில் ரியல் அட்மிரல் வசந்த கர்னகொடவின் சார்பில் அவரது சட்டத்தரணியால் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் தன்னைக் கைது செய்வதைத் தடுத்து கட்டளையிடுமாறு கோரியே கடந்த வாரம் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

மனுவை விசாரணைக்கு எடுத்த மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு விசாரணையை ஒத்தி வைத்தது. மூன்று நீதியரசர்களில் ஒருவரான நீதியரசர் பிரியந்த ஜெயவர்த்தன தனிப்பட்ட காரணங்களால் அமர்விலிருந்து விலகுவதாக அறிவித்தே விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த மனுவில் மனுதாரரான வசந்த கர்னகொடவால் கோரப்பட்டதற்கு அமைய அவரைக் கைது செய்வதற்கான தடை உத்தரவை வழங்கக் கூடாது என கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களில் ஒருவரான ரஜிவ்பின் தாயார் சரோஜா நாகநாதன் உயர் நீதிமன்றிடம் கோரி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு வசந்த கர்னகொடவின் மனுவுக்கு எதிராக திருமதி சரோஜா நாகநாதன் சார்பில் ஜனாதிபதி சட்டவாளர் ஜே.சி. வெலியமுனவால்நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தனது மகன் உட்பட 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் முக்கிய சந்தேகநகரான லெப். கொமாண்டர் சம்பத் முனசிங்கவுக்கு (நேவி சம்பத்) எதிராக அவரது தளபதி ரியல் அட்மிரல் வசந்த கர்னகொட 2009ஆம் ஆண்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார்.

தனது மனைவிக்கும் சம்பத் முனசிங்கவுக்கும் இடையே தொடர்பு உண்டு என்ற தனிப்பட்ட பிரச்சினையை முன்வைத்தே வசந்த கர்னகொட இந்த முறைப்பாட்டை வழங்கினார். எனினும் அதன்போது 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தையோ அல்லது சம்பத் முனசிங்கவுக்கு தொடர்புள்ள குற்றச்செயல்கள் தொடர்பிலையோ வசந்த கர்னகொட பொலிஸாருக்கு வெளிப்படுத்தவில்லை.

வசந்த கர்னகொட இந்த முறைப்பாட்டை வழங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாகவே 11 இளைஞர்கள் கடத்தல்கள் தொடர்பில் கடற்படையின் புலனாய்வுப் பிரிவு அவருக்கு வெளிப்படுத்தியிருந்தது.

எனவே மனைவி அசோக கர்ன்னகொட மற்றும் அவரது உறவினர் ஒருவருடன் சம்பத் முனசிங்க வைத்திருந்த சட்டபூர்வமற்ற தொடர்புக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு வழங்கிய வசந்த கர்னகொட, எனது மகன் உள்ளிட்ட 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் தெரிந்திருந்தும் வெளிப்படுத்தத் தவறினார். அதனால் அவரைக் கைது செய்வதனைத் தடுக்கும் வகையில் உத்தரவிடவேண்டாம் என்று திருமதி சரோஜா நாகநாதன் தனது மனுவில் கோரியுள்ளார். (ம-3)

## பரிசோதனை அறிக்கை...

பூர்வ கார்பன் பரிசோதனை அறிக்கை நேற்று மன்னார் நீதிமன்றத்துக்கு சட்டபூர்வமாக கிடைத்துள்ளதாக அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட சந்தேகத்திற்கு இடமான மனித எச்சங்கள் கடந்த மாதம் கார்பன் பரிசோதனைக்காக அமெரிக்காவிலுள்ள ஆய்வு கூடத்திற்கு மேலதிக ஆய்வுகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

குறித்த பரிசோதனை அறிக்கை 14 நாட்களில் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் குறித்த அறிக்கை நேற்று சட்ட ரீதியான ஆவணமாக மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு கிடைத்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கை தொடர்பான எந்த விபரங்களையும் தன்னால் வழங்க முடியாது எனவும் அவ் அறிக்கை தொடர்பாக ஆர்வம் உள்ளவர்கள் மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக பெற்றுகொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

மனித புதை குழியின் அகழ்வு பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பாக நீதவான், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னரே முடிவெடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை குறித்த மனித புதைகுழியில் இருந்து 335 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் 318 மனித எச்சங்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-285)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி: 06-03-2019
சீட்டிழுப்பு இலக்கம்: 923
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 1 4 0 3 4 1
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி: 2019-03-06
சீட்டிழுப்பு இலக்கம்: 123
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 08 09 14 18
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி: 2019.03.06
சீட்டிழுப்பு இலக்கம்: 2055
ஆங்கில எழுத்து: B
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 35 40 47 52
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி: 06/03/2019
சீட்டிழுப்பு இலக்கம்: 353
வெற்றி எழுத்து: M
சுப்பர் இலக்க: 04
வெற்றி இலக்கங்கள்: 13 25 26 69

## வெப்பமான வானி...

உள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வடமத்திய மாகாணத்தில் உள்ள அநுராதபுரம், பொலன்நறுவை, மற்றும் புத்தளம் மாவட்டங்களிலேயே இவ்வாறு கடும் வெப்பமான வானிலை நிலவுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம-3)

## வடக்கில் பொது...

நேற்று புதன்கிழமை பலாலிக்கு சென்றார்.

அங்கு விடுவிக்கப்பட்ட காணிகள் மற்றும் பாடசாலைகளை பார்வையிட்ட அவர் யாழ்ப்பாண சமூகங்களுக்கு பொருளாதார வாய்ப்புகளை வழங்கும் முகமாக மிகுதி காணிகளையும் விடுவிக்க வேண்டும் என கூறியுள்ளார். (ம-3)

## நிறைவேற்று அதி...

20ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு கொள்கையளவில் ஆதரவளிப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஜேவிபியிடம் நேரில் தெரிவித்துள்ளார்.

இந்த தகவலை ஜேவிபியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். எனினும் 20ஆவது திருத்தத்துக்கான ஆதரவு தொடர்பில் முழுமையான ஆதரவை மகிந்த தரப்புத் தெரிவிக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் நேற்று மாலை சந்தித்தனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்காக அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான பிரேரணை ஜேவிபியினால் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அதற்கு ஆதரவு பெறும் நோக்கில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போதே முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க தாமும் தமது அரசியல் அணியும் ஆதரவளிப்போம் என்று தெரிவித்துள்ளார். (ம-3)

## இலங்கை - சீன...

தாராபுரம் அல் மினார் வித்தியாலயத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சீனத்தூதுவர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இதன்போது அங்கு உரையாற்றிய சீனத் தூதுவர், மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்தமை எனக்கு மகிழ்ச்சி தருகின்றது.

மாணவர்களும் சிறார்களுமே ஒரு நாட்டினது எதிர்கால தூண்கள். அந்த வகையில் மன்னார் மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த சிறிய உதவியானது வருங்காலத்தில் இந்த மாவட்டத்திற்கு பாரிய உதவிகளை நல்குவதற்கு வழிவகுக்கும் என நம்புகின்றேன். மாணவர்களின் சிறந்த எதிர்காலத்திற்காக பிரார்த்திக்கின்றேன் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## பொதுத் தேர்தலு...

அண்மையிலும் இந்தக் கருத்தை வெளியிட்டிருந்த அவர் அதனை நேற்று மீளவும் குறிப்பிட்டார்.

பலவீனமான பாராளுமன்றம் ஒன்றில் உறுதியான முடிவுகளை எடுப்பது கடினமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டு நவம்பர்- டிசெம்பர் மாதங்களுக்கிடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ள நிலையில், அதற்கு முன்னதாக பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இல்லை.

இந்த நிலையில், ஜனாதிபதியின் இந்தக் கருத்தினால், தற்போதைய அரசைக் கவிழ்த்து, மீண்டும் ஒரு அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் இடம்பெறுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனினும் பாராளுமன்றைக் கலைக்கும் பிரேரணை ஒன்றை சபையில் சமர்ப்பித்து நிறைவேற்றினால் அது சாத்தியமாகும்.

அதற்கு ஜேவிபி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகளின் முழுமையான ஆதரவு எதிர்க்கட்சிக்கு தேவை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஆளுநர் சுரேன்...

போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், பழைய வடுக்களை கிளறாமல், எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வதற்கு இடமளிக்குமாறு இவர்கள் ஜெனிவாவில் கோரிக்கை விடுக்கவுள்ளனர் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களின் ஆசிரியர்களுடன் நேற்று நடத்திய சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனும் கலந்து கொண்டிருந்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி சரத் அமுனுகம, மகிந்த சமரசிங்க ஆகியோரைக் கொண்ட குழுவே ஜெனிவா கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில், இலங்கை அரசின் சார்பில் உயர்மட்டக் குழு பங்கேற்பதில்லை என்றும், ஜெனிவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதியே அதனைக் கையாளுவார் என்றும் வெளிவிவகார அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், ஜனாதிபதி தமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன், வடக்கு மாகாண ஆளுநரையும் ஜெனிவாவுக்கு அனுப்ப முடிவு செய்திருக்கிறார்.

இலங்கை விவகாரத்தில் வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு எதிர்ப்பு வெளியிடுவதற்காகவே, இவர்கள் ஜெனிவாவுக்கு அனுப்பப்படவுள்ளனர். (ம-3)

## எல்...

தெரிவித்துள்ளார்.

சில வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமது எல்லையை மீறுகிறார்கள். எதற்காக பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களத்தை வைத்திருக்கிறேன் என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். அவர்களுக்கு நான் சரியான முறையில் பதிலளித்தேன்.

மூன்று அமைச்சுக்களுக்கு மேல் நான் வைத்திருப்பதற்கு அனுமதியில்லை. இருந்தாலும் எத்தனை நிறுவனங்களையும் வைத்திருக்க முடியும்.

அரசிதழ் அறிவிப்பின் மூலமாக எந்தவொரு அரச நிறுவனத்தையும் நான் எனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியும் என அவர் தெரிவித்தார். (ம-3)


**கட்டார் வேலைவாய்ப்பு**
ஜிப்சம் கார்ப்பென்றர், காபென்றர் ஹெல்ப்பர், பெயின்ரர்
வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
077 00 38 215
021 221 9 221
இம்மாதமே பயண ஏற்பாடு...
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

**காண்டம் பார்த்தல்**
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)
(7692)

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

(C-5632)
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**டுபாய் வேலைவாய்ப்பு**
இம்மாதமே பயண ஏற்பாடு...
விற்பனை பிரதிநிதிகள் (ஆண்/பெண்)
வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
077 00 38 215
021 221 9 221
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

**பணியாளர் தேவை**
01. வரவேற்பாளர் - பெண்
02. சாரதிகள் - 6வீல், 10வீல் டிப்பர்
தொடர்புகளுக்கு:
077 037 6150
(7742)

**காணி விற்பனைக்கு**
சங்கத்தானை மத்தி சாவகச்சேரியில் 1 1/2 பரப்புக் காணியும், 2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.
077 418 0558
(7767)

**காணி விற்பனைக்கு**
இயக்கச்சி ஏ9 வீதிக்கு அருகாமையில் தென்னங்கன்றுகளுடன் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 525 9073, 076 400 6418
(7748)

**BA, B.Com, BBA (MEDIUM TAMIL)**
**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில் (வெளிவாரி)**
- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lஇல் கலை, வர்த்தகம், தொழில்நுட்பம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியும் பொது வினாவிற்கு (COMMON GENTRAL MARKS) 30 புள்ளிகளுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவர்.
- A/L 2017 ஆம் ஆண்டும் இதற்கு முன்னர் பரீட்சை எடுத்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- இக்கற்கை நெறிகளினது கால எல்லை மூன்று ஆண்டுகள் ஆகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக செய்து தரப்படும்.

(சி-6699)
பதிவு முடிவுத் திகதி: 25.03.2019
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
விபரங்களுக்கு: 021 222 8148, 077 846 9721, 077 607 1954, 077 314 4762

**வேலையாட்கள் தேவை**

01. உதவி சமையலாளர்
02. வெயிட்டர் (உணவு பரிமாறுபவர்)
தகுதியுடையவர்கள் மட்டும் நேரில் வரவும்.
(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.)
கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோரன்ட்
(ஆரியகுளம் சந்தி அருகில், யாழ்ப்பாணம்.) 077 740 4883
(C-5706)

**SRI MARUTHI TRAVELS**

(யாழ். பல்கலைக்கழகம் முன்பாக)
கார்கள், வான்கள்
நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
077 785 2456/ 077 377 7502
(7772)

**வேலைவாய்ப்பு**
உயர் தொழில் வாய்ப்புக்களுக்கான கணக்கியல்/ சந்தைப்படுத்தல் வியாபார முகாமைத்துவம்/ மனிதவள முகாமைத்துவம் ஆகிய வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பத்தை Dynamic Holdings வடமாகாணத்தில் வழங்குகின்றது.
உடன் அழைக்க 077 157 1699
(7772)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
**றாஜ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(7769)

**நிரந்தர வேலைவாய்ப்பு**
நாடளாவிய ரீதியில் இயங்கிவரும் எமது நிறுவனம் ஆனது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மேலும் பல கிளைகளை விஸ்தரிக்கவுள்ளது. இதில் உங்கள் திறமைகளுக்கான அங்கீகாரத்தினை வழங்கவுள்ளோம்.
பதவி வெற்றிடங்கள்

| | |
|---|---|
| வரவேற்பாளர் | (10,000 - 12,000/=) |
| மேற்பார்வையாளர் | (15,000 - 25,000/=) |
| உதவி முகாமையாளர் | (30,000/= - 40,000/=) |
| முகாமையாளர் | (45,000/=+ மேலதிகமாக...) |

அடிப்படைக்கல்வித் தகைமை O/L, A/L
40 பேருக்கு மட்டும் அனுமதி உண்டு.
தொடர்புகளுக்கு:
077 656 5807, 077 174 3524
(7770)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.